# பூங்கனி

THE POONKANI

கனி 05 | சிறுவர் மாத இதழ் | ஆகஸ்ட் 2005





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reebok City


- சகலருக்கும் தேவையான சகலவிதமான பாதணிகளையும் பெற்றுக்கொள்ள.....



- அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள்.....



- சகலவிதமான கடிகாரங்கள்....
- Bag வகைகள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள.....



## Reebok City

**இல. 87, கண்டிவீதி, வவுனியா.**

உரிமையாளர் : **K. கிருஷ்ணாநந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கனி
சிறுவர் மாத இதழ்
A Monthly magazine for children
கனி - 05 ஆகஸ்ட் - 2005

## ஆசிரியர் பார்வையில்

வணக்கம் வாசகர்களே!

### அட்டகாசமாய் கொண்டாடுங்கள்

கனி - 05இல் கலக்கிறோம் மகிழ்ச்சிதானே!

இது ஆகஸ்ட்விடுமுறைக் காலம் என்பதால், உங்களோடு சேர்ந்து விடுமுறையைக் கொண்டாட பூங்கனி ரெடி!

புரட்டுங்கள் பக்கங்களை! உள்ளே 16 பக்க விடுமுறைச் சிறப்பிதழ் காத்திருக்கிறது. உங்கள் மூளைக்கு வேலைதரும் புதிர்கள், போட்டிகள் போன்றவற்றோடு, பக்கத்திற்கு பக்கம் நகைச்சுவைகளும் தந்துள்ளோம். அனைத்தையும் படியுங்கள்! தவறாது உங்கள் அபிப்பிராயங்களையும் "நீங்கள் சொன்னவை" பகுதிக்கு அனுப்பிவையுங்கள்.

உங்கள் கருத்துகளும், பாராட்டுக்களுமே பூங்கனியின் வளர்ச்சிக்கு பெரும் உந்துசக்தியாகும். கூடவே குறைகளையும் சுட்டிக் காட்டுங்கள்!

விடுமுறைச் சிறப்பிதழ் காரணமாக எமது வழமையான ஆக்கங்கள் சில இம்முறை இடம்பெறவில்லை. அவை அடுத்த இதழில் இடம்பெறும்!

இப்பொழுதெல்லாம் ஏராளமான வாசகர்கள் தமது ஆக்கங்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்! அனைவருக்கும் நன்றிகள்! தொடர்ந்தும் அனுப்புங்கள்!

சரி, விடுமுறைச் சிறப்பிதழைப் படிக்க நீங்கள் தயாராவது புரிகிறது, படியுங்கள்! ஆகஸ்ட் விடுமுறையை அட்டகாசமாய்க் கொண்டாடுங்கள்!

நன்றி.

அன்புடன் ஆசிரியர்.

**வாசித்தலினூடே வாழ்வைக் காண்போம்.**

ஆசிரியர் : கே. ஆர். றஜீவன்
பக்க வடிவமைப்பு : கே. திலீபன்
முகாமையாளர் : ஏ. ஆர். இராஜேஸ்வரன்



சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் அக்டோபர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்டப்படிப்பு


## சிறுகதை

முருகேசு ஒரு வர்த்தகர். அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். முதலாவது மகன் நாதன், இரண்டாவது மகன் சிவா. இருவரும் பாடசாலை சென்று படித்து வந்தார்கள்.

முருகேசு அந்த ஊரிலேயே பெரிய வர்த்தகர். அவர் கடையில் அதிக வியாபாரம் நடப்பதனால் முருகேசு தனக்குத் துணையாக நாதனை படிப்பை விட்டுவிடும்படி கூறி ஐந்தாம் தரம் படித்துக் கொண்டிருந்த நாதனை தன்னுடன் கடைக்கு அழைத்துச் சென்றார்.

இரண்டாவது மகனான சிவா படிப்படியாக பரீட்சைகள் எழுதி க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கூடிய புள்ளிகளை எடுத்து பல்கலைக்கழகம் சென்று அங்கு படித்து முடித்து பட்டம் பெற்று வீடு வந்து சேர்ந்தான்.

அங்கு வந்த சிவா தன் தந்தையை நோக்கி "அப்பா எனக்கு உத்தியோகம் செய்ய விருப்பமில்லை. அதனால் எனக்கு ஒரு கடை போட்டுத் தாருங்கள்" என்று கேட்டான். அதற்குத் தந்தை "சிவா நீயெல்லாம் கடை திறந்து நடத்துவது என்றால் சிறந்த





சர்வதேச குடிநீர் தினம் மார்ச் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் கட்டாயம் தேவை. நீ எங்களுடைய கடையில் வந்து கொஞ்சநாளைக்கு வேலையைப் பழகு பின் நானே உனக்கு கடைகட்டித் தருகிறேன்" என்றார். "என்னப்பா நீங்கள் சொல்வதைக் கேட்டால் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஐந்தாம் வகுப்புப் படித்த அண்ணன் அந்தப் பெரிய கடையை நடத்தும்போது, பல்கலைக்கழகம் சென்று பட்டம்பெற்ற நான், அதுவும் வர்த்தகத்தில் பட்டம்பெற்ற நான் கடையை நடத்த மாட்டேனா? உங்களுக்கு கஷ்டம் என்றால் சொத்தைப்பிரித்து தாருங்கள். நான் கடையைப் போட்டுக் கொள்கிறேன்" என்றான்.

அதற்குத் தந்தை ஒன்றுமே கூறாமல் சிவா கேட்டதைக் கொடுத்து வாழ்த்தி அனுப்பி வைத்தார். சிவாவோ எதையும் யோசிக்காமல் கடை அமைத்து அனுபவமற்றவர்களை வைத்து நடத்தினான். ஆனால் அங்கு வியாபாரம் நடக்கவில்லை. இலாபமும் கிடைக்கவில்லை. மாறுதலாக எல்லாவற்றையும் இழந்தான். பின் தந்தையிடம் சென்று நடந்த-வற்றைக் கூறி மன்னிப்புக் கேட்டான். அதைக்கேட்டதும் தந்தை கோபப்படவில்லை. "சிவா கவலைப்படாதே, நாதனிடம் சென்று அவனுடன் சேர்ந்து எப்படி வியாபாரத்தை நடத்துகிறான் என்று நன்கு அறிந்தபின் நீ உனக்கு ஏற்றவாறு வியாபாரத்தை தொடங்கு'' என்றார். சில காலங்களின் பின் வியாபாரத்தைத் தொடங்கி தந்தையைப் போன்றே அவ்வூரிலே பெரிய வர்த்தக-னானான் சிவா. அப்பொழுது தான் பட்டப்படிப்பை விட அனுபவப் படிப்புத்தான் எம் வாழ்க்கைக்கு துணையாக அமைகின்றது என்று சிவா உணர்ந்து தான் செய்த தவறை எண்ணி கவலை யடைந்தான். ★

சி.சிவயாழினி
தரம் 11D,
வ/சைவப்பிரகாசா ம.வி

## என்னைத் தெரியுமா?



மாா்ட்டின் லூதர் கிங் என்பது எனது பெயர். 1929இல் அமெரிக்காவில் பிறநத நான் சாதாரண மக்களின் உரிமைக்காக மிகவும் பாடுப-ட்டேன். மக்கள் அனைவரும் சமத்துவமாக, சம உரிமையுடன் வாழவேண்டும் என்பதே எனது விருப்பம். 1964இல் எனக்கு நோபல் பரிசு கிடைத்தது. ●



அயர்லாந்து நாட்டின் நாணயம் "ஐரிஸ்பவுண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் ஒரு பாடசாலை

# கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்


## சோதனைகளைக் கடந்து....

கடந்த இதழில் அறிவித்ததைப் போலவே கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தே இம்முறை மாதம் ஒருபாடசாலை! எமது தெரிவுக் குழுவினர் கிளி/கனகபுரம் மகாவித்தியாலயத்தைத் தெரிவு செய்ய, தகவல்கள் திரட்டும் நோக்கில் பாடசாலைக்கு விஜயம் செய்தோம்.

அவசர அலுவல் ஒன்றின் பொருட்டு அதிபர். திருமதி. ஆர்.திலகன் வெளியே சென்றிருக்க, உபஅதிபர் திருமதி. கே.குமாரலிங்கம் அவர்கள் புன்னகை பூத்த முகத்தோடு எமை வரவேற்றார்.

பரஸ்பர அறிமுகங்களோடு, பாடசாலையின் வரலாறுபற்றி நாம் வேண்டுகோள் விடுக்க, உபஅதிபர் அவர்கள் மிக அமைதியாகவும், தெளிவாகவும் வரலாற்றைச் சொன்னார்.

1968ம் ஆண்டு அதிபர், ஆசிரியர் ஒருவர், பத்து மாணவர்கள் சகிதம் பாடசாலை ஆரம்பமானது, அக்காலத்தில் கனகபுரத்தில் மிகப்பெரிய கோழிப்பண்ணை ஒன்று இருந்திருக்கிறது. அப்





1997ல் செவ்வாய்க்கிரகத்தில் "பாத்.'.பைண்டர்" தரையிறக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணையில் பணிபுரிந்த ஊழியர்களின் பிள்ளைகள் கற்பதற்காகவே இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதாம்!

முதலாவது அதிபராக திருவாளர் பொன்னையா அவர்கள் பணிபுரிந்திருக்கிறார். பாடசாலை படிப்படியாக வளர்ந்து 1985ம் ஆண்டு புதிய அதிபர் திரு. க.ஆறுமுகதாஸ் அவர்களின் வருகையோடு எழுச்சி பெறுகிறது. 42 ஆசிரியர்களுடன் பாடசாலை சிறப்பாக இயங்க, யார் கண்பட்டதோ, 1986இல் நாட்டுப் பிரச்சனை காரணமாக பாட-சாலை மூடப்படுகிறது. பின்னர் தற்காலிகமாக வேறோர் இடத்தில் இயங்கி 1990இல் பழைய இடத்தில் மீள ஆரம்பமாகிறது பாடசாலை.

மீண்டும் முன்பைவிட எழுச்சியுடன் படிப்படியாக பாடசாலை வளர்கிறது. 1994ம் ஆண்டு வெள்ளி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அத்துடன் மிகச் சிறந்த முறையில் வெள்ளிவிழா மலர் ஒன்றும் வெளியிடப்படுகிறது.

1995இல் யாழ், இடப்பெயர்வினால் மாணவர்கள் தொகை அதிகரிக்கிறது. அப்போது 100 ஆசிரியர்களும், 4000ற்கு மேற்பட்ட மாணவர்களும் இருந்திருக்கிறார்கள்! அதனால் காலைப் பிரிவு, மாலைப்பிரிவு என இரண்டு பிரிவுகளாக பாடசாலை நடத்தப்பட்டது.

இந்நிலையும் அதிகநாள் நீடிக்கவில்லை. மீண்டும் 1996இல் இடப்பெயர்வு! யுத்தம் காரணமாக பாடசாலை கட்டிடங்கள் தரைமட்டமாகின்றன. பின்பு ஸ்கந்தபுரம் எனும் இடத்தில் தற்காலிக கொட்டகைகளில் பாடசாலை இயங்குகிறது.

நான்கு வருடங்கள் கழித்து 28-08-2000இல் பழைய இடத்திற்கு திரும்புகிறது பாடசாலை. மீண்டும் படிப்படியாக வளர்ச்சி! இன்று பதிய கம்பீரத்தோடு, புதுப் பொலிவுடன் காட்சி தருகிறது.

## உப அதிபர் சொல்கிறார்....




"அறிவை வளர்க்கவும், கல்வியை மேம்படுத்தவும் எத்தனையோ வசதிகள் உள்ள இக்காலத்திலும் கல்வியை உதாசீனம் செய்யும் போக்கு காணப்படுகிறது. இந்நிலை மாறி அனைவரும் கல்வி கற்பதில் ஆர்வம் காட்டவேண்டும்."



கடிகாரத்தைக் கண்டுபிடித்த A.L.பிரிகேட் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருத்தப்படாத நிலையில் விளையாட்டு மைதானம்


எனினும் இப்பாடசாலையில் பல வளப் பற்றாக்குறைகள் இருக்கின்றன. போதியளவு கட்டிடங்கள் இன்மை முக்கிய பிரச்சனையாக இருக்கிறது. தற்போது 1800ற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்! ஆரம்பப்பிரிவு (Primary) அசிரியர்களுக்கும் பற்றாக்குறையிருக்கிறது.

அத்துடன், கணினி அறை, நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடம் எதுவுமின்றி மிகுந்த சிரமத்துடனேயே இயங்கி வருகிறது இப்பாடசாலை!

முக்கியமாக இடப்பெயர்வு காரணமாக பாடசாலையின் முக்கிய ஆவணங்கள் பல அழிந்துவிட்டதுடன் நிலப் பற்றாக்குறையும் இருக்கிறது!

மேற்படித் தகவல்களை வழங்கிய உப அதிபர் திருமதி. கே.குமாரலிங்கம் அவர்களின் ஞாபக சக்தி எம்மை வியக்க வைத்தது. ஆண்டுகள், பெயர்கள், தரவுகள் அனைத்தையும் தனது ஞாபகத்தில் வைத்துக் கொண்டுதான் எமக்குக் கூறினார்! அவரிடம் இருந்து விடை பெற்றுக்கொண்டு புகைப்படம் எடுப்பதற்காக பாடசாலையை வலம் வந்தோம்! நிரந்தரக் கட்டிடங்கள் ஒரு சிலவற்றோடு, தற்காலிக கொட்டகைகளிலும் வகுப்புகள் நடைபெற்றதைக் காணமுடிந்தது.

இத்தனை வளப்பற்றாக்குறைகள் இருப்பினும் கல்வி முயற்சியில் மாணவர்களும், ஆசிரியர்களும் சோர்ந்துபோய்விடவில்லை. ஒவ்வொருவருடமும் 10 மாணவர்களுக்கு 2 பேர் பல்கலைக்கழகத்திற்கு செல்கிறார்கள்! தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் கணிசமான அளவு பெறுபேறு கிடைக்கிறது.






ஒரு சிலந்தி உற்பத்திசெய்யும் 800கிராம் எடையுள்ள நூலின் நீளம் 12,750 மீற்றர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1986இல் கிளிநொச்சி மாவட்டத்தில் மிகச்சிறந்த பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது இப்பாடசாலை!

விளையாட்டுத் துறையிலும் பல சாதனைகளைப் புரிந்திருக்கிறது கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம். ஆயினும் பாடசாலை மைதானம் இன்னமும் திருத்தப்படாத நிலையில் இருக்கிறது. "மைதானத்தைப் புனரமைக்கவும், பாடசாலை புனரமைப்பு வேலைகளுக்கும் பழைய மாணவர்கள் உதவி புரியவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார் உப அதிபர்.



எத்தனையோ சோதனைகளை கடந்து இன்று நிமிர்ந்து நிற்கும் கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் இன்னும் பல சாதனைகள் புரியும் என்பது எமது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். அதற்குப் பூங்கனியும் என்றும் பக்கத்துணையாக இருக்கும்.

**ஹரீஸ்** ●

புகைப்படங்கள் : பொற்காலம் வண்ணக் கலையகம் கிளிநொச்சி.

அடுத்த "மாதம் ஒரு பாடசாலை"யாக
வவுனியா மாவட்டத்திலுள்ள
பிரபல மகளிர் கல்லூரியொன்று
தெரிவுசெய்யப் பட்டுள்ளது.
அது எது?
அடுத்த இதழ் வரை பொறுத்திருங்கள்.

## கவிதையே தெரியுமா?

# முயற்சி செய்



அன்புகாட்ட முயற்சி செய்!
அரவணைக்க முயற்சி செய்!
ஆணவம் ஒழிக்க முயற்சி செய்!
கடவுளை வணங்க முயற்சி செய்!
கல்வி கற்க முயற்சி செய்!
கருணை காட்ட முயற்சி செய்!
உண்மை பேச முயற்சி செய்!
உதவி செய்ய முயற்சி செய்!
ஊருடன் வாழ முயற்சி செய்!
பண்பாய் வாழ முயற்சி செய்!
பணிந்து வாழ முயற்சி செய்!
நட்புடன் வாழ முயற்சி செய்!
நற்கருமங்களுக்காக நாளும் முயற்சி செய்!
நன்றியை நினைக்க நாளும் முயற்சி செய்!

**S.கோகிலவதனி,** தரம்5A
வ/பெரியகோமரசன் குளம் ம.வி.வவுனியா



இந்தோனேசியாவின் தலைநகரம் ஜகார்த்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியை நோக்கி




## "பசித்திரு, தனித்திரு, விழித்திரு"

வெற்றிக்கான படிக்கற்கல் பல உண்டு. கல்வி! உழைப்பு! இரண்டும் வெற்றியின் பாதைகள்! ஒரு மனிதன் இரண்டு விடயங்களை நோக்கியே எப்போதும் குறிவைத்துள்ளான்! இந்த இரண்டு விடயங்களில் ஒன்றுக்காக தனி மனிதன் எப்போதுமே போராடுகிறான்!

ஒன்று புகழ்! இரண்டு செல்வம்!! இந்த இரண்டு அல்லது இரண்டில் ஒன்று இல்லாது போனால் "வாழ்க்கைத் துடிப்பு" அவனிடம் இருந்து அறுந்து விடுகிறது. வாழ்க்கையில் "நம்பிக்கை தகர்ந்துவிடுகிறது"

இலட்சியம்! நல்ல மனிதனாக வாழ்வது! பிறருக்கு நன்மை செய்தல்! இது எல்லாமே ஒரு வகை புகழ் என்ற இலக்கினை நோக்கியதே! இது சில வேளைகளில் எல்லோருக்கும் பொருத்தமற்றதாக இருக்கலாம்!. ஆனால் பெரும்பாலான மனிதர்கள் இவ்வாறுதான் வாழ்கிறார்கள்! வாழவேண்டும்! அதில் தவறு இல்லை!

இங்கு அதுவல்ல விடயம். வாழ்க்கையில் புகழை! செல்வத்தை! ஒவ்வொரு மனிதனும் பெற வேண்டும். அது நாணயமாக, தர்மமான வழியில் இருக்கவேண்டும்! இதில் தவறு இல்லை!

இன்று "உதயன்" பத்திரிகை யாழ் நகரில் தனித்துவமான, அதிக நாளாந்த இதழ்களை வெளியிடுகிறது. தனக்கென ஒரு பாணியில் முன்னணிப் பதிரிகையாக விளங்குகிறது! அது கடந்து வந்த பாதைகள் பல! மேடு பள்ளங்களைத் தாண்டி வெற்றிநடை போடுகிறது! இதன் நிறுவுனர், பத்திரிகை ஆசிரியர்கள், ஊழியர்கள் இரவுகளை பகலாக்கி உழைத்ததன் வெற்றிக்கனிதான் இது!

அகில இலங்கை கம்பன் கழகம் இ.ஜெயராஜ் என்ற தனிமனிதன் (இதனை ஒருவேளை அவர் ஏற்காமல் இருக்கலாம்) கனவில் உதித்து நனவான ஆலவிருட்சம்! பேச்சுக்கலையிலேயே ஒரு தனித்துவத்தை இலங்கையில் ஏற்படுத்திய "கம்ப வாரிதி" அவர்களின் புகழ் இலக்கியத் துறைக்குக் கிடைத்த வெற்றி!

தேசமான்ய விருதுபெற்ற இலங்கையின் முதற்தர பணக்காரர்களில் ஒருவரான சிலிங்கோ குரூப், செலான் வங்கி நிறுவனங்களின் ஸ்தாபகர் தேசமான்ய லலித் கொத்தலாவல அவர்களின் வாழ்க்கை உழைப்பாளர்களின், முயற்சியாளர்களின் வாழ்க்கைக்கு சிறந்த எடுத்துக்காட்டு!

இந்த வெற்றிகள் எல்லாம் நீங்கள் பெறக்கூடியவையே!

கனவு காணுங்கள்! முயற்சி செய்யுங்கள்! அயராது உழையுங்கள்! இதற்கு நீங்கள் நன்கு அறிந்த மூன்று மந்திரங்களை பின்பற்றத் தவறிவிடாதீர்கள்.

**1. பசித்திருத்தல்,**
**2. தனித்திருத்தல்**
**3. விழித்திருத்தல்**

இனி பதவி என்ற செல்வம், புகழ் என்பன உங்களை நாடி வரும்! உஷாராக இருங்கள். வெற்றி உங்கள் வீட்டில் வாசலில் கதவைத் தட்டும்!



"வறிய மனிதனின் மாமிச ஆகாரம்" எனப்படுவது சோயா அவரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “உலக வரலாறு” 2

S.S.வாசன்

பூமி 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. கண்டங்கள், சமுத்திரங்கள் தோன்றிய விதம்பற்றி ஏற்கனவே விளக்கினோம். பூமிஉயிர்கோளம் என நாம் பெறுமைப்பட வாழவைப்பது பூமியிலுள்ள பிராண வாயுவான ஒக்சிசன், நீர் என்பனவே! முதலில் பூமியின் மேல் நச்சு வாயுக்களான மீதேன், அமோனியா, கரியமிலவாயு என்பனவே காணப்பட்டன! நீண்ட காலங்களுக்குப் பின்னர் ஒக்சிசன் வாயு தோன்றியது! இது கடலில் முதலில் தோன்றியதாக நம்பப்படுகிறது! இன்றுகூட பூமிக்கு வேண்டிய அதிகளவு ஒக்சிசன் வாயுவை கடல்களே வழங்குகின்றன! பூமியில் நீண்டகாலமாக நிகழ்ந்த மழை வீழ்ச்சி, இடி, மின்னல், புயல், எரிமலை கக்குகைகள், அல்காக்களின் தோற்றம் எல்லாமே ஒக்சிசன் வாயுவின் தோற்றத்திற்கு வழிவகுத்தன!

வளிமண்டலம் இன்றுள்ள நிலைமையை அன்மைக்காலத்தில்தான் பெற்றது. பூமியில் உயிரினங்களின் தோற்றமும் கூர்ப்புமே வளிமண்ட கூர்ப்புக்கு வித்திட்டது! அமோனியா; காபனீர் ஒக்சைட், மீதேன் மற்றும் பல்வேறு வாயுக்களால் ஆன வளிமண்டலம் “தாழ்தல் வளிமண்டலம்” எனப்பட்டது.

ஒக்சிசன்; நைதரசன் என்பன வளிமண்டலத்தில் சுயாதீனமாக இருக்கவில்லை. ஏறத்தாழ 3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு “ஒளித்தொகுப்பு” முதல் முதலாக நீலப் பச்சை அல்காக்களில் ஆரம்பித்தது!

இச்சசெயற்பாட்டின் போது ஒக்சிசன் வாயு பக்கவிளைவாக வெளிவிடப்பட்டது. அவ்வாறு விடுக்கப்பட்ட ஒக்சிசன் வாயுவில் ஒரு பகுதியை பச்சைத் தாவரங்கள் சுவாசிக்கப் பயன்படுத்தின! மிகுதி வளிமண்டலத்தில் சேகரிக்கப்பட்டது! இதனால் ஒக்சிசன் கணியம் வளிமண்டலத்தில் சுயாதீனமாக அதிகரிக்கத் தொடங்கியது! இவ்வாறு இன்றுள்ள ஒக்சிசன் அளவு இற்றைக்கு 50 மில்லியன்



சீக்கியர் என்பதற்கு கடவுளின் உண்மையான சீடன் என்று அர்த்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “உலக வரலாறு”

ஆண்டுகளுக்கு முன்பே உருவாகிவிட்டது! உயிரினத் தொகுதிகள் நைதரசன் வட்டத்தின் அங்கமாக மாறிய போது புவியில் நைதரசனும் தோன்றியது!

காற்றின்றி வாழும் பக்றீரியாக்கள் தவிர எல்லா அங்கிகளுக்கும் ஒக்சிசன் இன்றியமையாதது! முன்பு கூறியதுபோல பூமியில் 3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உயிரினம் தோன்றியது! என நம்பப்படுகிறது! அதுவும் கடலிலேயே தோன்றியது! கடந்த 3 மில்லியன் வருடங்களாக நிகழ்ந்த கூர்ப்பின் விளைவாகவே இன்று பூமியில் காணப்படும் உயிரினங்கள் தோன்றியது! ஒளித்தொகுப்புச் செய்யவல்ல தாவரங்கள் தோன்றி வளிமண்டலத்திற்கு ஒக்சிசன் வாயுவை வெளிவிட்ட பின்பே உயிரினங்கள் பூமியில் அதிகளவில் பரவத் தொடங்கின!

புவிச் சரிதவியல் காலங்கள் உயிரினங்களின் தோற்றத்தை தெளிவாக விளக்கவல்லன! **கேம்பிரியனுக்கு** முந்திய காலம் எனப்படும் தொல்காலத்தில் ஓரணு அல்காக்கள், ஓரணுப் பிராணிகள் தோன்றியதாக நம்பப்படுகிறது! “பலியோசோயிக் யுகத்தில்” கடல் அல்காக்கள்; ஓடுள்ள பிராணிகள் “கேம்பிரியன் காலத்திலும்” பவளங்கள், நட்சத்திர மீன்கள் “ஓடோவிசியன் காலத்திலும்” முதல் மீன்கள், முதல் நிலத்தாவரங்கள் “சிலூரியன் காலத்திலும்” தவளைப் பிரிவுகள் “டேவேனியன் காலத்திலும்” ஊர்வனவின் தோற்றம், முதற் காடுகளின் தோற்றம் என்பன “கார்போனிபரஸ்” காலத்திலும், வானஸ்பதிகளின் தோற்றம் “பேமியன் காலத்திலும்” இடம்பெற்றன.

இரண்டாம் யுகம் எனப்படும் **மெசசோயிக் யுகத்தில்** முதல் டைனோசர்கள் “திரயாசிக் காலத்திலும்” முதற் பறவைகள், பூவுள்ள தாவரங்களின் தோற்றம் “யுராசிக் காலத்திலும்” டைனோசர்களின் அழிவு, பறவைகளின் வளர்ச்சி என்பன “கிறிட்டேசியஸ் காலத்திலும்” நிகழ்ந்தன!

மூன்றாம் யுகமான **கயினோசோயிக் யுகத்தில்** காடுகள் “இயோசின் காலத்தில்” செழித்து வளர, “ஒலிக்கோசீன் காலத்தில்” உயர்ந்த பாலூட்டிகள் வளர்ச்சியடைய “மயோசீன் காலத்தில்” பூக்கும் செடிகள், புல்வெளிகள் அதிகமாயின! “பிளேயோசின் (Pliocene) காலத்தில்'' மனிதன் தோற்றம் பெற்றான். அன்மைக்காலமான ''குவாற்றனறி யுகத்தில்'' “பளேட்டோசீன் காலத்தில்” பணிப்பிரலயங்கள் ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் அழிந்துபோயின.





பாரசீக பேரரசை நிறுவியவர் மஹாசைரஸ் என்ற அரசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உலக வரலாறு”

நான்கு பனியுகங்கள் ஏற்பட்டு பனிக்கட்டிகள் கரைந்து ஓடி இதுவரை உயிரினங்கள் ஆயிரக்கணக்கில் நீரில் மூழ்கி இறந்துபோயின!

அண்மைக்காலத்தில் மரங்கள் குறைந்து செடிகள் வளர்ந்தன! மனிதன் சமூகங்கள் நாகரீக மனிதன் வாழும் காலமாக இது மாறியது!

மனிதனின் தோற்றமொரு தனியான கதை! குரங்கில் இருந்து தோன்றினான் என்பது உண்மைதான்! டார்வின் - கலபாகோஸ் தீவுகளில் “இயற்கைத்தேர்வு” கொள்கை பரிணாம வளர்ச்சியை விளக்கும் விதம் மனித தோற்றத்தை, வளர்ச்சியை விளக்க உகந்த கோட்பாடாக உள்ளது.

இதுவரை மனிதனில் மூன்று வர்க்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

1. ஹோமோ இரக்ரஸ்! (யாவா மனிதன், பீகிங் மனிதன்)
2. ஹோமோ நியண்டதால்! (ஜேர்மனி)
3. ஹோமோ சேப்பியன்ஸ்! (இன்றைய மனிதன்)

இவர்களின் வாழ்க்கை முறை. நடவடிக்கைகள் பற்றி அடுத்துப் பார்ப்போம். பயணிப்போம்.

**(பயணம் தொடரும்)**

## வாழ்த்துக்கள்



**செல்வி சத்தியா கோணேசமூர்த்தி!** வ/குளவிசுட்டான் அ.த.க. பாடசாலையின் தரம் 10 மாணவி. பாடசாலையின் 15 வயதுப் பெண்கள் பிரிவு வலை பந்தாட்ட அணியின் உப தலைவர்! அண்மையில் மாணவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் சிறந்த “பேற்றுக்கெய்வோனாக” (Goal Shooter) தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். அத்துடன் உயரம் பாய்தல் போட்டியிலும் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவாகியிருக்கிறார். “சத்தியா விளையாட்டில் மட்டுமன்றி படிப்பிலும் கெட்டிக்காரி” என்கிறார் பாடசாலை அதிபர் திரு. ந.சிவலிங்கம் அவர்கள். வாழ்த்துக்கள் சத்தியா! தொடர்ந்தும் உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள்.



1985இல்தான் இசைத்தட்டுக்கள் (CD) முதன் முதலில் வெளிவந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கே. ஆர். ஆர்.

கனி - 04ல்! ரகசிய புதையலை தான் எடுக்கப் போவதாக அருண் உறுதியாகக் கூற பாட்டி அதற்குத் தடை போடுகிறார். அத்துடன் உடனடியாக அருணை நகரத்திற்கு அனுப்பிவைக்கிறார். போகும் வழியில் இருவர் துப்பாக்கி முனையில் அருணைக் கடத்துகின்றனர். பாழடைந்த மண்டபம் ஒன்றுக்கு அருணைக் கொண்டுவந்த அவர்கள், அங்கு ஏற்கனவே கடத்தி வைக்கப்பட்டிருந்த ஆர்த்தியைக் காட்டி "இவள் உன்னோட தங்கச்சி'' என்கிறார்கள்.

இனி....

**5**

''இவள் என்னோட தங்கச்சியா?'' அதிர்ச்சியுடன் அருண் கேட்க.

"ஆமா, இவ உன்னோட தங்கச்சியேதான்! ஆனா இவளை உனக்குத் தெரியாது, ஏன்னா சின்ன வயசிலேயே உன்னையும், இவளையும் பிரிச்சிட்டாங்க"

கூட்டத்தில் இருந்த ஒருவன் விளக்கினான்!

அப்போது திடீரென்று ஒரே பரபரப்பு! "ஐயா இவர்ரார்" என்று ஒருவன் ஓடிவந்து சொல்ல, அனைவரும் எழுந்து நின்றனர்.

சற்று நேரத்தில், நன்கு உயரமான, கரிய நிறமுடைய, ஒரு பெரியவர் கம்பீரமாய் அங்கு வந்து நின்றார்.

அவரைக்கண்ட அனைவரும் "வணக்கம் ஐயா" என்று பணிவாகக் கூற,

கைகளைக் காட்டி சைகைமூலம் அவர்களது வணக்கத்தை ஏற்றுக்கொண்ட அப்பெரியவர் அருணையும், ஆர்த்தியையும் உற்றுப் பார்த்தார்!

அவரது தோற்றம் அருணுக்கும் ஆர்த்திக்கும் பயத்தினை உண்டாக்கியது.

யார் இவர்! இவ்வளவு உயரமாக இருக்கிறாரே! ஓ..." இவர்தான் இந்த கடத்தல் கூட்டத்தின் தலைவரோ!"

அருண் தனக்குள் எண்ணிக்கொண்டான்.

"நாங்க கடத்தல் கூட்டம் இல்லப்பா, காப்பாற்றும் கூட்டம்" என அந்த பெரியவர் கூற,



உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் தலைமையிடம் ரோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணுக்கு ஆச்சரியம்,

"என்னப்பா, நீ மனசுக்குள்ள நெனைச்சது எப்படி எனக்குத் தெரியும்ன்னு பாக்கிறியா? பேரன் நெனைக்கிறது தாத்தாவுக்குத் தெரியாதா என்ன?"

மெல்லிய சிரிப்போடு அந்தப் பெரியவர் கேட்க அருண் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு,

"நீங்க என்னோட தாத்தாவா?"

"ஆமாப்பா, நீ மாரடைப்பு வந்து இறந்து போனதா நெனைச்சுகிட்டிருக்கியே உன்னோட தாத்தா, அது நான்தான்"

"என்ன இதெல்லாம் ஒரே மர்மமா இருக்கு"

"இதென்ன பெரிய மர்மம்? இனித்தான் நிறைய மர்மங்கள் வெளிவரப்போகுது" என மீண்டும் பெரியவர் புன்னகையோடு கூற,

"அப்போ எதற்கு எங்களை இங்க கடத்திகிட்டு வந்தீங்க!"

"கடத்திகிட்டு வரலை அருண் காப்பாத்த அழைச்சிகிட்டு வந்திருக்கோம்!"

"காப்பாத்தப் போறீங்களா? யார்கிட்ட இருந்து?"

"உன்னோட பாட்டிகிட்ட இருந்து"

"என்னது என்னோட பாட்டிகிட்ட இருந்தா?"

"ஆமாப்பா, அவ உன்னோட பாட்டி இல்லை! சூனியக்காரி! இன்னும் பத்து நாள்ல, அவ உன்னைக் கொல்லப் போறா!"

"என்ன சொல்றீங்க? எதுக்காக என்னோட பாட்டி என்னைக் கொல்லணும்? பாட்டி எவ்வளவு நல்லவ! என்மேல உயிரையே வைச்சிருக்கா!" அருண் கோபத்தில் வெடிக்க, பெரியவர் சொன்னார்,

"கோபப்படாத அருண்! நீ சின்னப் பையன்! உன்னோட வாழ்க்கையில நடந்த நிறைய சம்பவங்கள் உனக்குத் தெரியாது! நீ பாட்டி பாட்டி என்கிறாயே, அவ உன்னோட உண்மையான பாட்டி கிடையாது! உன்னோட பாட்டி எப்பவோ இறந்திட்டாங்க!"

"என்னோட பாட்டி இறந்திட்டாங்களா"

"ஆமாப்பா, உன்னோட பாட்டி ராஜாத்தி அம்மாளை, இப்போ நீ பாட்டின்னு சொல்லுறியே அந்த சூனியக்காரி அவ கொன்னுட்டா!"

## கவிதையே தெரியுமா?

## அன்னையின் சிறப்பு

பத்துமாதம் மடியேந்தி
பாரினிலே என்னை ஈன்றெடுத்து
பாலகனாக நானிருந்த வேளை
பாச அமுதை ஊட்டி வளர்த்து

நல்லவனாக நான் வாழ
நற்பண்பிலே என்னை வளர்த்து
நாளைய சமுதாயம் நற்பெயர் சூட்டிடவே
நல்ல நல்ல எண்ணம் கொண்டு

தன் கஸ்டம் பாராது என்னை
ஊக்கமுடன் கற்க வைத்து
ஊர்போற்ற, பார்போற்ற
உத்தமனாக என்னை வளர்த்து

என் வயிற்றுப் பசி போக்கிட
தன்வயிற்றுப் பசி மறந்து
தாலாட்டும்பாடி நிம்மதியாய்
தூங்கவைத்து இன்னோர் ஜென்மம்
இருந்தால் உன் கருவில்
உன் மடியில் தவழ எனக்கு
ஒரு வரம் தா தாயே.....

ம.யக்சன், யா/முத்துத்தம்பி ம.வி.
யாழ்ப்பாணம்.



மனித உடலிலுள்ள மிகப்பெரிய உள்ளுறுப்பு கல்லீரல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இதை நம்ப மாட்டேன்! நீங்க பொய் சொல்லுறீங்க! உங்களை யாரென்றே எனக்குத் தெரியாது! அனாவசியமா என்னோட பாட்டிய குற்றம் சொல்லாதீங்க"

அருண் கோபத்தோடு பேசினான்.

"தாத்தா சொல்றது உண்மைதான் அண்ணா! நீங்க தாராளமாக இதை நம்பலாம்"

ஆர்த்தி அருணிடம் கூற,

அருணுக்கு மேலும் கோபம் தலைக்கேறியது.

"ஏய்! வாயை மூடு! நீங்களெல் லாம் யாரென்றே எனக்குத் தெரியாது! எல்லோரும் நல்லா பிளான் பண்ணி நடிக்கிறீங்க, தயவு செய்து என்னை விட்டுடுங்க! நான் பாட்டிகிட்டப் போகணும்'

"அண்ணா அவசரப் படாதீங்க, நான் கூட முதல்ல, இவங்கள தப்பாத்தான் நெனைச்சேன் பின்னாடிதான் உண்மை தெரிஞ்சது!" ஆர்த்தி அருணைச் சமாதானப் படுத்தினாள்.

"என்ன பெரிய உண்மை தெரிஞ்சது?"

இவர்தான் எங்களோட உண்மையான தாத்தா! இவர்களை நாம நம்பலாம்"

அருணால் எதையுமே நம்ப முடியவில்லை! அவனுக்கு எல்லாமே புதிராக இருந்தது! பஸ்ஸில் போகும்போது துப்பாக்கி காட்டிக் கடத்து கிறார்கள்,





இந்தியாவின் தேசிய மலர் தாமரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் காப் பாற்றப்போகி றோம் என்கி றார்கள், பாட்டியை சூனியக்காரி என்கிறார்கள்! இவர் களை எப்படி நம்புவது? என்ன நோக்கத்திற்காக என் னைக் கடத்தி வைத்திருக்கிறார்கள்? அருணுக்கு குழப்ப மாகவும், லேசான பயமாகவும் இருந்தது!

அந்தப் பெரியவர் மீண்டும் புன்னகையோடு...

"அருண், பயப்பிடாதே! உன்னோட நிலைமை எனக்குப் புரியுது! நீ போய் நல்லா ஓய்வெடு! நாளைக்கு காலையில உன்னைப் பார்க்கிறேன்!"

என்று கூறிவிட்டு உள்ளே போய் விட்டார்!

அருணை சிறிது தூரம் அழைத்துக்கொண்டு போனார்கள்!

அந்தப் பாழடைந்த மண்டபதிற்குப் பின்னால் சிறிது தூரத்தில் ஒரு அழகிய வீடு! ஒரு அறைக்குள் அருணை அழைத்துக் கொண்டு போன அவர்கள், "அருண் இதுதான் உன்னோட அறை ஓய்வு எடுத்துக்கோ!" என்று கூறிவிட்டு அங்கிருந்து சென் றார்கள்.

இரவாகியது! அருணுக்கு சாப்பாடு கொடுத்தார்கள்! வேண்டாவெறுப்பாக சிறிது சாப்பி ட்டான்! அங்கிருந்து எப்படியாவது தப்பி ஓட வேண்டும் என அருண் தீவிரமாக எண்ணிக்கொண்டி ருந்தான்!

நள்ளிரவு

எங்கும் பலத்த அமைதி நிலவியது!

அறைக்கதைவை மெல்லத் திறந்து வெளியே வந்தான் அருண்!

யாரையும் காணவில்லை!

சற்றுத்தூரத்தில் ஒரு மரத்தின் கீழ் காவலாளி ஒருவன் உறங்கிக்கொண்டிருந்தான்!

மெதுவாக காலடி எடுத்து வைத்து முன் வாசலுக்கு வந்தான் அருண்!

ஒரு மெல்லிய கரம் அவனைப் பற்றிப் பிடித்து இழுத்தது!

அருண் திடுக்கிட்டுத் திரும்பினான்!

கையில் கூரிய கத்தியுடன் ஆர்த்தி!

- மர்மங்கள் நீளும்

## என்னைத்தெரியுமா?



எனது பெயர் ஜோசப் பிரீஸ்ட்லி. இன்று நீங்கள் பருகி மகிழும் சோடா பானத்தை முதன் முதலில் தயாரித்தது நான்தான். அத்துடன் ஒக்சிசன், சல்பர்டை ஒக்சைட், அமோனியா போன்ற வாயுக்களையும் கண்டுபிடித்தது நான்தான். 1733 - 1804 வரை வாழ்ந்த நான் ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறேன்.



அமெரிக்காவின் தேசியப் பறவை கழுகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபியின் புதிர்ப்போட்டி

இலக்கம் 05

கோபியின் புதிர்ப்போட்டி இல. 03ல் "காகம் ஏன் கா...கா...என்று ஏன் கத்துகிறது?" எனக் கேட்டாலும் கேட்டோம், வந்து குவிந்த பதில்களைப் பார்த்து நாம் சிக்கி, முக்கி, விக்கி, திக்கிப் போய்விட்டோம்.

காகம் கரையுமே தவிர கத்தாது என சிலவாசகர்கள் எமது தலையில் குட்டவும் செய்தார்கள். எப்படியோ வாசகர்களின் கற்பனை வளத்திற்கு அளவே இல்லை என்பதே எமது முடிவு. அனைவருக்கும் எமது நன்றிகளும், வாழ்த்துக்களும்.

**மிக வித்தியாசமாகக் கற்பனை செய்து பதில் எழுதியவர்**

① **பா.வேணி மெற்றில்டா**

அளம்பில், முல்லைத்தீவு.

**இவரது பதில் :-**

இசையினால் வசமாகதவர் எவருமே இல்லை. இந்த தந்திரத்தை பயன்படுத்தும் காகம் தனது இனத்தவரை அழைக்க இசையை பயன்படுத்துகிறது. அந்த இசையின் அடிப்படை சுரங்களான ஸ, ரி, க, ம, ப, த, நி என்பதில் தனக்கு பொருத்தமாக "கா" ஸ்வரதானம் அமைவதால் தனது இனிய இசைக்கு "கா"வினைப் பயன்படுத்தி கா....கா.... என்று கத்துகிறது.

**மேலும் பொருத்தமான விடைகள் எழுதிப் பரிசு பெறுவோர்**

2. சை.ஸ்ரீரகுநாதன், 289, ஆனைவிழுந்தான், வன்னேரி.
3. ஜெ.அனோஜன், தரம் 9, மு/வித்தியானந்தாக் கல்லூரி.
4. சுபித்ரா ஜெகசோதிநாதன், தரம் 7, வ/இ.ம.ம.வி.
5. த.சிவகுமாரி, 12, பூம்புகார், வவுனியா.
6. ப.விினோதா, தரம் 7A, மு/உடையார் கட்டு ம.வி.
7. செ.ஹம்சவதனி, தரம் 9A, மன்/புனித சவேரியர் பெ.தே.பா. மன்னார்.
8. சிவானந்தராசா கோவற்சன், எடுவோடை வளவு, 8ம் கட்டை, மல்லாகம்.
9. கே.ஜனகசிவசுதன், தரம் 11B, கிளி/பளை மத்திய கல்லூரி.
10. சி.கமலரூபி, மு/உடையார்கட்டு ம.வி

இப் பத்துப்பேருக்கும் பரிசாக இ.சிறீஸ்கந்தராஜா எழுதிய "பஞ்சவர்ணக் கதம்பம்" எனும் நூல் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.



கனடாவின் தேசியப் பறவை வாத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாதக்கேள்வி

"அறஞ்செய்ய விரும்பு" என்று சொன்ன ஔவையார்
இன்று இருந்தால் எப்படிச் சொலியிருப்பார்?

## விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**கோபியின் புதிர்ப்போட்டி-05**
**பூங்கனி,**
**இல-141, திருநாவற்குளம், வவுனியா.**

எங்கே உங்கள்
கற்பனைக் கங்காருவை
தட்டிவிடுங்கள்.
பதில்களை எழுதுங்கள்.....
பரிசுகளை வெல்லுங்கள்.....

### பரிசு என்ன?

மிகச் சிறந்த பதில்கள் எழுதும் 10 பேருக்கு க.கோகுலதாஸ் எழுதிய "இருவிழிப் பார்வை ஒருதுளி விடிம்" கவிதை நூல் பரிசாக வழங்கப்படும்.

**முடிவுத் திகதி 30-08-2005**


வெளிநாட்டில் உங்கள் உறவுகள் அனுப்பும் பணத்தை
ஓரிரு நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமா?
உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**கோபி ஏஜென்சி** இல - 33, மில்வீதி,

உலகெங்கிலிமிருந்தும் விரைவாகப் பணத்தைப்
பெற ஒரே வழி

**WESTERN UNION** மணி டிரான்ஸ்ஃபர்

Western Union ன் அங்கீகாரம் பெற்ற முகவர்கள்
**கோபி எஜென்சி**
**இல-33, மில் வீதி,**
**வவுனியா.**

**10 இலக்கங்களுடன் நாடுங்கள்**

T.P No : 024 - 2222411, 024 - 4589225, 024 - 2224351

2004ம் ஆண்டிலும் மிகச் சிறந்த முகவருக்கான
விருதினையும் பெற்று வெற்றி நடைபோடுகிறது கோபி ஏஜென்சி.




இலங்கையில் தேசிய சேமிப்பு வங்கி 1971இல் ஆரம்பிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கனியின் தேடல்

"வ/புதுக்குளம் ம.வி தரம் 11 மாணவியான செல்வி நி.சுபாஜினி அண்மையில் நோர்வே சென்று வந்தார்." என்று எமக்கு தகவல் கிடைக்க, "எதற்காக?" என பாடசாலை அதிபர் திரு. அமிர்தலிங்கம் அவர்களிடம் கேட்டோம்.

"நோர்வேயில் நடந்த சிறுவர் மாநாட்டில் கலந்துகொள்ளவே சுபாஜினி அங்கு சென்றார்" எனக் கூறிய அதிபர் "மேலதிக விபரங்களை சுபாஜினியிடமே கேளுங்கள்" என்றார்.

சுந்தரபுரம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் சுபாஜினியைச் சந்தித்தோம். "ஷேட் (Shade) நிறுவனத்தின் உதவிக் குழுவில நான் தலைவியா இருக்கிறன. அதன்மூலமா நான் வாழ்ற கிராமத்திற்கு நிறைய சேவைகள் செய்ய முடியுது. அன்மையில நோர்வே நாடு தனது 100வது சுதந்திரதினத்தை முன்னிட்டு நடத்திய சிறுவர் மாநாட்டில் கலந்து கொள்ளவே நோர்வே போனேன்" என விளக்கினார் சுபாஜினி.



**சரி அங்கு என்ன நடந்தது?**

எம்மைப் போலவே நேபாளம், உகண்டா, சோமாலியா போன்ற பலநாட்டுச் சிறுவர்களும் வந்திருந்தனர். பல்வேறு நாடுளிலும் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடினோம். **"சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியம்"** என்ற தலைப்பில் நான் உரையாற்றினேன்.



**நோர்வேயில் சுபாஜினி**

சுபாஜினிக்கு பேச்சுத் துறையில் மட்டுமன்றி நடிப்புத் துறையிலும் ஆர்வம் அதிகம். அத்துடன் நாடகங்களை எழுதும் ஆற்றலும் அவரிடம் இருக்கிறது.

"எனக்கு எல்லாமே அம்மாதான்! அவதான் கஷ்டப்பட்டு கூலி வேலை செய்து என்னைப் படிப்பிக்கிறார். நான் வீட்டிற்கு மூத்த பிள்ளை என்பதால் நன்கு படித்து எனது அம்மாவின் கஷ்டங்களைப் போக்குவேன்" என்றார் சுபாஜினி நம்பிக்கை நிறைந்த குரலோடு.

"உங்களது எதிர்கால இலட்சியம் என்ன?" என நாம் கேட்டபோதே மேற்படி பதில் சுபாஜினியிடமிருந்து வந்தது.

என்னைப் போன்ற மாணவர்களது திறமைகளை வெளிப்படுத்திவரும் பூங்கனியின் தேடலுக்கு நன்றிகள் என்றார் சுபாஜினி.

**சுபாஜினிக்கு எமது வாழ்த்துக்கள்.**



யாழ் நூலை இயற்றியவர் சுவாமி விபுலானந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் சொன்னவை

பூங்கனிக்கு வணக்கம்.
நான் பூங்கனியை விரும்புவது ஏனென்றால் : "பூங்கனி மாத இதழ் என்றாலும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு கலக்கல்தான்." கணனி கண்ணா கணனி எனக்கு மிகவும் பிடிச்சிருக்கு. பூங்கனி உட்பக்கத்தை வர்ணத்தில் வெளியிட மாட்டீர்களா?

**M.யஸ்ரின் லெம்பேட்** மன்/புனித ச.ஆ.தே.பாடசாலை

---

பூங்கனியே! உலக மாதா கண் திறந்தது போல் எங்களின் அறிவுக் கண்களை திறந்து விட்டாயே இனி கண்கள் மூடத்தான் மனம் வருமா.

**த.பவானி,** தரம் 13, வ/சின்னடம்பன் பாரதி.வி.

---

அன்புடன் ஆசிரியருக்கு,
ஜுலைமாத கனி - 04 இல் இருந்த அம்சங்கள் எம்மைக் கவர்ந்துள்ளன. குறிப்பாக குறும்புக்குமரனின் "அ முதல் ∴தானடா" பொது அறிவை மேம்படுத்துகின்றது. "ரகசிய புதையல்" பக்கத்திற்கு பக்கம் விறுவிறுப்பை ஏற்படுத்துகின்றது.
"என்றென்றும் பூங்கனியுடன்"

**வே.துவாரகன்** 9A, வ/விபுலானந்தாக் கல்லூரி.

---

பூங்கனியே! உனது முன்னேற்றப் பாதையில் நாங்களும் காலடிவைத்து விட்டோம். இனி எமது இலட்சியம் வீண் போகாது என நம்புகிறேன். கணக்குகள் பற்றியும் வெளியிடலாமே!

**த.பசீலன்,** தரம் 9, வ/சின்னடம்பன், பாரதிவித்தியாலயம்.

---

என்றும் என் இனிய பூங்கனியே! நீ தாங்கிவரும் கருத்துக்கள் யாவுமே மிகவும் தரமானவை. இதைவிடவும் இன்னும் சிறந்த ஆக்கங்களைத் தாங்கி, பூங்கனியின் உட்பக்கத்திற்கும் வர்ணங்கள் தீட்டி வெளிவர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**சி.கமலரூபி,** A/L (2007) கலை, மு/உடையார் கட்டு ம.வி

---

பூங்கனி ஆசிரியருக்கும், ஏனைய ஊழியர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்! பூங்கனி மாத இதழ் எங்களுக்குப் பொழுது போவதற்கும், தேடல்கள் இல்லாமல் பல தகவல்களைப் பெறுவதற்கும் சிறந்த நூலாக இருக்கிறது. போட்டிகள் வைத்து மாணவர்களுக்கு பரிசுகளும் கொடுக்கிறீர்கள் நன்றி!

**சி.சிவயாழினி,** இல. 175, பூந்தோட்டம் வவுனியா.

---

முத்தான முத்துக்கள் போல் எம் நெஞ்சை உசுப்பிவிட்ட, தேன் கனிபோல் வந்த பூங்கனியே, நீ எமக்கு நல்லதொரு சிறந்த வழிகாட்டி, என்றென்றும் நீ புதிய பல தகவல்கள் உடன் வெளிவர எனது வாழ்த்துக்கள். முத்தான முத்துக்களே நீங்கள் என்றென்றும் துணை புரிவீர்களா எங்கள் கனிக்கு?

**T.காவேரி,** சங்கானை, தொட்டிலடி, யாழ்ப்பாணம்.

---

பூங்கனி சஞ்சிகை மிகவும் தரமாக இருக்கின்றது. ஒரு விடயத்தை மட்டுமல்லாது பல விடயங்களைத் தாங்கிவருவதனால் இன்னும் இன்னும் எமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்கள் பணி தொடர வாழ்த்துக்கள்.

**பா.திலகானந்தம்,** 1ம் வருடம்,
கொழும்பு தமிழ் இணையப் பல்கலைக்கழகம்.

---

பூங்கனி பல தகவல்களைப் பெறுவதற்கு, சிறந்த நூலாக விளங்குகின்றது, கனி, 3ஐ வாசித்தேன். மிகவும் சூப்பர். அனைத்து ஆக்கங்களுமே மிக சிறப்பாக இருந்தன தொடர்ந்தும் புதுமையாகவும் சிறப்பாகவும் வித்தியாசமாகவும் வெளிவருமென எதிர்பார்க்கிறேன்.

**த.சிவகுமாரி,** இல. 12, பூம்புகார், வவுனியா.

---

பூங்கனிக்கு வணக்கம்! இனிமையான சுவைகளை தந்திடும் உனக்கு பல கோடி நன்றிகள். எல்லாமே சூப்பர். சிறார்களை மட்டுமல்ல பெரியோர்களையும் கவர்ந்த உனக்கு புகழ்வதற்கு வார்த்தைகளே இல்லை. கனியே இன்னும் பல விடயங்களை தந்து நம் நாட்டு நூல்களிடையே முதலிடம் பெற எனது வாழ்த்துக்கள்.

**அனுஷா,** தரம் 11A, யாழ் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, சங்கானை.

**முகப்பில் சுபாஜினி**

நைஜீரியா நாட்டின் நாணயம் கோபோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுங்கப்பா



பூங்கனி விடுமுறை ஸ்பெஷல் 2

**சூடான பிரியாணி**

''என்ன சர்வர் கோழிப் பிரியாணி இவ்வளவு சூடா இருக்கு?''


''அது நெருப்புக்கோழி பிரியாணி சார்''


ப.டிலக்சன், தரம் 8, வ/பூவரசங்குளம் ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கனி விடுமுறை ஸ்பெஷல் 3

# வித்தியாசங்கள் ஒன்பது
# கண்டுபிடிச்சா நல்லது





**என்னாச்சு?**


''பேராசையின்னு ஒரு புத்தகம் எழுதினீங்களே என்னாச்சு சார்?''
''பெருநஷ்டம் ஆயிடுச்சு''

இ. சாமுவேல், தரம் 9B, வ/விபுலானந்தாக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பிடம்

கதை, ஓவியம்
**துவாரகன்**





## தெரியல சார்

"டேய் மாறன் தாஜ் மஹால் எங்கேடா இருக்கு?"
"தெரியாது சார்"
"மேசைக்குமேல் ஏறடா"
"ஏறியும் தெரியல சார்"

அ.கஜன்
தரம் 6B, மு/மல்லாவி மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தலைவலி

''வைத்தியர் இல்லையா?''

''அவருக்கு தலைவலியின்னு பக்கத்து வைத்தியசாலைக்கு போயிருக்காரு''

தே.குகதீஸ், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கனி விடுமுறை ஸ்பெஷல் 6

எந்த வழியால் போனால் நாயாருக்கு எலும்பு கிடைக்கும்?



## ஆறும் ஆறும்

''மூன்றும் மூன்றும் எத்தனை''

''ஆறு''

''ஆறும் ஆறும்?''


''பன்னிரண்டு''

''இல்லை ஆறும் ஆறும் சேர்த்தா வெள்ளம் தான் வரும்.

சு.மயூரி, தரம் 5E,
வ/இறம்பைக்குளம் ம.ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டங்களை ஒழுங்குபடுத்தி வரைந்து ஒளிந்திருக்கும் உருவத்தைக் கண்டுபிடியுங்கள்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |

## பூங்கனி விடுமுறை ஸ்பெஷல்

## 7

### நம்பரை நோட் பண்ணு


''செல்போன்ல பேசிகிட்டு ஒருத்தன் ஸ்கூட்டர்ல போனானே நம்பரை நோட் பண்ணினியா?''

''செல்போன் நம்பரை எல்லாம் எப்படிசார் நோட் பண்றது''


த.கமலரூபன், வ/த.ம.ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயம்போடு! விளையாடு!!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விளையாடுவது எப்படி?

- இரண்டு அல்லது மூன்றுபேர் விளையாடலாம்.
- தாயம்போட்டு ஆரம்பித்து அவரவர் காய்களை நகர்த்தவும்.

**படம் 4 :**
ஐ...சைக்கிள்!
சைக்கிளில் ஏறி 7க்கு போகவும்

**படம் 8 :**
ஐயோ...பாம்பு!
ஆரம்பத்தில் இருந்து வரவும்.

**படம் 10 :**
கப்பலில் ஏறி 13க்கு போகவும்.

**படம் 12 :**
மரம்! ஒரு சுற்று இளைப்பாறவும்.

**படம் 14 :**
ஐயையோ.....சுனாமி!
ஆரம்பத்தில் இருந்து வரவும்.

**படம் 16 :**
மழையில் நனைந்தபடியே ஒரு சுற்று முன்னேறவும்.

**படம் 25 :**
ஆஹா...புதையல்
தாயம்போட்டு உரியதாக்குகங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்புக் குமரன்
வழங்கும்

# ஐடியா
## இலவசம்



உலகத்திலேயே இலவசமாக கிடைக்கக்கூடியது "ஐடியா" மட்டும்தான் எண்டு கனபேர் சொல்லுறவை! அதாலதான் நானும் எனக்குத் தெரிஞ்ச சில ஐடியாக்களை உங்களுக்கு இலவசமாத் தரப்போறன். வாசிச்சுப்போட்டு ஃபொலோ பண்ணுங்கோ! ஆனா அதால வாற விளைவுகளுக்கு நான் பொறுப்பில்ல சொல்லிப்போட்டன்.

நீங்கள் பாவிக்கிற பேனையில அடிக்கடி மை முடிஞ்சு, பேனை வாங்கிற செலவு அதிகமாகிக்கொண்டு போகுதா, கவலையை விடுங்க! நான் ஒரு சூப்பர் ஐடியா தாறன். இதை நீங்க ஃபொல பண்ணினா பேனை வாங்கிற செலவு மிச்சம். அதாவது இனிமேல் எழுதும்போது பென்சிலால எழுதுங்க. பேனைக்கு மையும் முடியாது, பேனை வாங்கிற செலவும் மிச்சம்

வகுப்பில முதலாம் பிள்ளையா வரவேணும் எண்டு கனபேருக்கு விருப்பம் இருக்கும்! அப்பிடி உங்களுக்கும் விருப்பம் இருந்தா, நான் சொல்ற மாதிரி செய்யுங்கோ! அதாவது காலம வெள்ளன ஆறுமணிக்கு எழும்பி ஸ்கூலுக்குப் போங்கோ! வேற ஒருத்தரும் அந்த நேரம் வகுப்புக்கு வந்திருக்க மாட்டினம்! அப்ப நீங்கதானே முதலாம் பிள்ளை.

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு" எண்டு சொல்லுவினம். ஹி.....ஹி..... எத்தனை நாளைக்குத்தான் இப்படியே சொல்லிக்கொண்டு இருப்பியள், இனிமேல் இப்படிச் சொல்லுங்கோ!

"குயிலுக்கும் தன் குஞ்சு இரும்புக் குஞ்சு"
"மயிலுக்கும் தன் குஞ்சு செப்புக் குஞ்சு"
கொக்குக்கும் தன்குஞ்சு பிளாட்டினக் குஞ்சு"
"புறாவுக்கும் தன் குஞ்சு அலுமினியக் குஞ்சு"

## ஒளிந்திருக்கும் பழமொழி

| | | | | |
|---|---|---|---|---|
| ம் | டு | ட் | ந் | ற் |
| போ | லு | ள | அ | றி |
| லே | டா | து | போ | ஆ |

மேலே பிரபலமான பழமொழி ஒன்று ஒளிந்திருக்கிறது. அது எது? கண்டுபிடியுங்கள்!

சுண்டெலியாரின் கையில் இருப்பது எது? பட்டமா?, பலூனா?, பூங்கனியா?



### நம்பரை நோட் பண்ணு

''செல்போன்ல பேசிகிட்டு ஒருத்தன் ஸ்கூட்டர்ல போனானே நம்பரை நோட் பண்ணினியா?''

''செல்போன் நம்பரை எல்லாம் எப்படிசார் நோட் பண்றது''

த.கமலரூபன், வ/த.ம.ம.வி.

பூங்கனி விடுமுறை ஸ்பெஷல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவைக் கவிதைகள்

## அப்பாவிச் சுப்பன்

சுப்பன் இருந்தான் அப்பாவி.
சுயமாய் எதையும் செய்திடுவான்!
அப்பால் ஒன்றும் புரியாமல்
அவனே மனமும் வருந்திடுவான்.

நீரில் கோலம் போட்டிடுவான்;
நிழலை வெட்டிக்களைத்திடுவான்!
தேரின் கையிற்றை தான் மட்டும்
தெருவில் இழுத்தே பார்த்திடுவான்!

கடலில் அலைகள் ஓயுமென
கரையில் நின்றே காத்திருப்பான்!
'இடுக்கண் வருங்கால் நகுக' என்றே
இறந்தவர் வீட்டில் பேசிடுவான்!

மொட்டினைப் பிரித்து முகர்ந்தபடி
முற்றிலும் மணமே இல்லை என்பான்!
பட்டினி கிடப்பான் விரதமென்று
பழையதைப் பார்த்தால் உண்டிடுவான்!

கொட்டி உடைப்பான் முட்டைகளை
கோழிக் குஞ்சைக் காண்பதற்கு
கட்டிய நாயின் வாலினையே
கையால் நிமிர்த்த முயன்றிடுவான்!

உண்மை பேச வேண்டுமென்று
உள்ளதை எல்லாம் உளறிடுவான்!
பண்பாய் நடக்க முடிவு செய்தே
பார்ப்போர் காலில் விழுந்திடுவான்!

நடக்கும் மீன்கள் என்று சொல்லி
நடுத்தெருவில் அதை போட்டிடுவான்!
பறக்கும் பறவை பருந்தென்று அதன்
பருத்த இறகை வெட்டிடுவான்!



ப.வைஷ்ணவன்,
சின்னப்புதுக்குளம், வவுனியா.



## அதோ பார் மொட்டை

அதோ பார் மொட்டை
அவன் உயரமோ ரொம்பக் குட்டை
நெத்தியிலே திரு நீற்றுப் பட்டை
அணிவதோ நைலான் சட்டை
பரீட்சைக்கு எடுத்துச் செல்கிறான் அட்டை
அவன் பேனா எழுதுவது பட்டை
பரீட்சையில் வாங்குவது முட்டை!

வி.காயத்திரி, வவுனியா.

## எங்கிருந்து வருகிறது?

''மெழுகுதிரி எரியும் போது ஒளி எங்கிருந்து வருகிறது?''
''அதை அணைக்கும்போது ஒளி எங்கு போகிறதோ
அங்கிருந்து வருகிறது சார்''

இ.ஜெனிற்றா,
தரம் வ/கனகராயன்குளம் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனமாக யோசியுங்க கட்டங்களை நிரப்புங்க

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | |
| | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | 13 | 14 | |
| 15 | 16 | 17 | 18 | 19 | |
| 20 | 21 | | 22 | 23 | 24 |

**இடமிருந்து வலம் :**

1. நடனம் – ஒத்தசொல்
6. பரபரப்பு
11. சிறிய பாத்திரம்
15. கடன் பட்டவன் கடன்கொடுத்தவன் முன்பு நிற்கும் நிலை
22. நிலை (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

2. கழுத்தில் அணியப்படும் ஒரு ஆபரணம் (குழம்பியுள்ளது)
3. சமையலறை உபகரணம் ஒன்று (கீழிருந்து மேல்)
4. ஒரு நோய் (குழம்பியுள்ளது)
5. மிடுக்கு (குழம்பியுள்ளது)
11. சோறு

## அண்ணனின் பெயர்

*''பின்லேடனின் அண்ணனின் பெயர் என்னடா?''*

*''தெரியாது நீயே சொல்லு''*

*''முன்லேடன்''*

தெ.தவசீலன்
கேப்பாபுலவு, முள்ளியவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கனி விகடமுறைஷ்பெஷல்

# பெர்னாட்ஷாவின் பதில்!

பெர்னாட் ஷாவின் வீட்டிற்கு நண்பர் ஒருவர் வந்தார். ஷாவின் வீட்டில் அலங்காரத்திற்காக பூக்கள் வைக்கின்ற பூக்கிண்ணங்கள் எங்குமே இல்லாததைக் கண்டார். உடனே அவர் ஷாவைப் பார்த்து "உங்களுக்கு பூக்கள் என்றால் மிகவும் பிடிக்கும் என்று சொன்னார்கள். அனால் உங்கள் வீட்டில் பூக் கிண்ணங்களையே பார்க்க முடியவில்லையே" என்று கேட்டார்.

அதற்கு ஷா, "எனக்கு குழந்தைகள் என்றாலும் உயிர்தான் அதற்காக அவர்களின் தலைகளை வெட்டி இங்கு அழகிற்காக வைக்க முடியுமா?" என்று கேட்டார்.

# சின்ன சிரிப்புக் கதைகள்

## யாருக்கு அதிக பசி?

அக்பர் அரண்மனையில் நடந்த விருந்தில் பீர்பால் அக்பருக்கு அருகில் இருந்தார். அக்பர் பீர்பாலை கேலி செய்ய விரும்பினார். யாருக்கும் தெரியாமல் அவர் தமது தட்டில் இருந்த வாழைப்பழத்தோல்களை பீர்பாலின் தட்டில் போட்டுவிட்டு, இன்று பீர்பால் மிகுந்த மகிழ்ச்சியில் இருக்கிறார் போலிருக்கிறது. அவருடைய தட்டில் சாதாரணமாய் இருப்பதைவிட வாழைப்பழத்தோல்கள் இரண்டு மடங்கு அதிகமாக இருக்கின்றன எனக் கூறினார்.

பீர்பாலும் சற்றும் சளைத்தவரல்ல. உடனே அவர் என்னைவிட அவருக்குத்தான் அதிகப்பசி என்று நினைக்கிறேன். அரசர் தமது தட்டில் தோலைக்கூட விட்டு வைக்கவில்லையே!" என்று அமைதியாக கூறினார்.

## கைக்குட்டையில் கழுதை

வின்சன் சர்ச்சில் ஒருமுறை தம் நண்பர்களுடன் விருந்து ஒன்றில் பேசிக்கொண்டிந்தார். ஒரு நண்பர் சர்ச்சிலை மட்டம் தட்ட நினைத்து அவர் வெளியே சென்ற சமயம் அவரது கைக்குட்டையில் கழுதையின் படம் ஒன்றை வரைந்து வைத்துவிட்டார். திரும்பி வந்து பார்த்த சர்ச்சில் என் கைக்குட்டையில் யார் முகம் துடைத்தது. அவர் முகம் அப்படியே இதில் பதிந்துவிட்டதே என்றார்.

-இ. சிறிஸ்கந்தராஜா
கொழும்பு

## அண்ணனின் பெயர்

''ஏன் கையில கிளவுஸ் போட்டுகிட்டு பூங்கனி படிக்கிற''
''இது சுடச்சுட செய்திகளைத் தரும் பூங்கனியாமே!''

கு.சுபோதன்,
நெளுக்குளம், வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூங்கனி விடுமுறை ஸ்பெஷல்

# வேடிக்கை விடுகதைகள்

### A

1. மேல் மாடி வல்லவன் மேடு பள்ளம் உள்ளவன், அங்கங்களின் தளபதி அறிவுக்கு அதிபதி. அவன் யார்?

2. சிகப்பு அரசிக்கு தண்ணீரே
தாய்வீடு.
தாய்வீட்டோடு ஒட்டாமல்
பச்சைத்தம்பிகளின் மாநாடு
அது என்ன?

3. என்னைக் காட்டிலும் சின்னவன்
எண்ணெய்க் காட்டினில் வசிப்பவன்
அவன் யார்?

4. இருட்டில் ஓடுவான் திருடன் அல்ல!
விரட்டிப் பிடித்திடுவான்
திருடனை அல்ல!
அவன் யார்?

5. விரிந்த தட்டில் நிறைந்த பலகாரம்
விருந்துக்குத்தான் ஆளில்லை
அது என்ன?

**பரமலிங்கம் டிலக்ஷன்**
வ/பூவரசங்குளம் ம.வி

### B

1. ஆக்கும் கறிக்கு ஆகும் பூ
அனைவரும் உணவாய்க்
கொள்ளும் பூ
தலையில் சூடிக் கொள்ளாப்பூ
தரணியில் என்ன பூ?

2. பகலில் தூங்குவான்
இரவில் அலறுவான்
அவன் யார்?

**ஆ.அபிராமி**
தரம் 5A,
கிளி/பளை மத்திய கல்லூரி

### C

1. வீட்டுக்கு வந்த விருந்தாளி
வாசலில் நிற்கிறார்
அவர் யார்?

2. எங்கள் வீட்டுப் பையனுக்கு
சிவப்புத் தாடி
அது என்ன?

3. இது துடிக்க மறந்தால்
அதனால் துடிப்போர்
ஆயிரம் பேர்
அது என்ன?

4. பட்டையை பட்டையைக் கிளப்பி
பதினாறு பட்டையைக் கிளப்பி
முத்துப் பட்டையைக் கிளப்பி
முன்னால வாறாள் தேவதையாள்
அவள் யார்?

**யோ. சர்மிளா**
தரம் 4B, மு/உடையார்கட்டு ம.வி

## எப்படியிருக்கு?

''கால்நடை ஆஸ்பத்திரி ஆரம்பிச்சிங்களே எப்படியிருக்கு?''
''ஒரு நாய்கூட அந்தப் பக்கம் வரமாட்டேங்குது''

கெ.பிரசன்னா
தரம் 8, மு/யோகபுரம் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சன் கந்தசாமி




## விடுகதை விடைகள்

**A**
1) மூளை
2) தாமரை
3) பேன்
4) பூனை
5) நட்சத்திரம்

**B**
1) வாழைப் பூ
2) ஆந்தை

**C**
1) செருப்பு
2) சேவல்
3) இதயம்
4) சோளப்பொத்தி

## ஒன்பது வித்தியாசங்கள் இவைதான்

1) இமை
2) முட்டை
3) தவளையின் கால்
4) தவளையின் கண்
5) மரத்தின் இலை
6) பாம்பின் வால்
7) தவளை இருக்கும் இடத்தின் பூ
8) தவளை இருக்கும் இடத்தின் இலை
9) மரக் கிளை

## ஏங்கிட்ட இல்ல சார்

''எட்டாம் வகுப்பு தமிழ் புத்தகம் ஒண்ணு தாங்க''
''ஏங்கிட்ட இல்ல சார்''
''அப்போ நான்காம் ஆண்டு தமிழ் புத்தகம் இரண்டு தரவேண்டியததானே''

**சி.கோகிலவேணி,** தரம் 9, மு/உடையார்கட்டு ம.வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

# அதிசய உயிரினம் - பிளாட்டிபஸ்

விசித்திர விலங்குகள் நிறைந்த அவுஸ்திரேலியாவில் வாழும் விலங்குகளில் பிளாட்டிபஸ்சும் ஒன்று. இது முட்டையிட்டு பால் கொடுக்கும் விலங்கு. இவற்றின் பாதம் தோலால் விரல்களுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

பிளாட்டிபஸ் ஊர்வன பிராணிகளின் குணாதிசயங்களை ஒத்துக் காணப்படும். முட்டையிடுவதில் பிளாட்டிபஸ் ஊர்வனவற்றை போலவே இருக்கும்.

நம் வீட்டுப் பூனையின் அளவே பிளாட்டிபஸ் காணப்படுகிறது. ஆணின் உடல் 50 முதல் 60 செ.மீ நீளமும், பெண்ணின் உடல் 40 முதல் 50 செ.மீ நீளமும் இருக்கும். முதிர்ந்த பிளாட்டிபஸ் 2 கிலோ எடை இருக்கும்.

தண்ணீர் புகாத தடிமனான தோலின் மேல் அடர்ந்த முடி காணப்படும். பிரௌன் (Brown) வர்ணத்தில் உடல் காணப்படும்.

பிளாட்டிபஸ்சுக்கு தட்டையான நீண்ட அலகு உள்ளது. இந்த அலகு சாம்பல் மற்றும் கறுப்பு வர்ணத்தில் இருக்கும். அலகின் மேல் இரண்டு துவாரங்கள் காணப்படும், கீழ் அலகு மேல் அலகைவிட சிறியதாக இருக்கும். இது தண்ணீருக்குள் மூழ்கி நீந்தும்போது காது, கண், மூக்கு துவாரங்களை மூடிக்கொள்ளும்.

இது ஒருநாளில் 12 மணிநேரம் உணவு தேடுவதிலேயே செலவழிக்கும். 20 - 40 நொடி தண்ணீருக்குள் மூழ்கி உணவு தேடும். 10 நொடி வெளிவந்து மூச்சுவிடும். ஒரு மணிநேரத்துக்கு80 முறை இவ்வாறு மூழ்கும். சேகரித்த உணவுகளை வாய்க்கு அருகில் இருக்கும் பையில் சேமித்து வைத்துக்கொள்ளும். கரையேறி தன் வளைக்குள் சென்று பையில் சேமித்த உணவை வாய்க்குள் கொண்டுவந்து மென்று விழுங்கும்.

ஆற்றுப்படுகை, ஏரி, ஓடை ஓரங்களில் பிளாட்டிபஸ் வளை தோண்டும். நீள் வட்டவடிவில் 4.5 முதல் 9 மீட்டர் நீளமுடையதாய் இருக்கும்.

பொதுவாக பிளாட்டிபஸ் கூட்டாக வாழ்க்கை நடத்துவதில்லை. தனித்தனியாக வாழ்கின்றன. பெண் பிளாட்டிபஸ் 2 அல்லது 3 முட்டைகளை இடும். 10லிருந்து 12 நாட்களில் குட்டி முட்டையிலிருந்து வெளியேறும். ஐந்து மாதங்களுக்குப் பின் குட்டி தனியாக வாழும்.

புழு, பூச்சிகள், கடல் வாழ் சிறிய உயிரினங்கள் இதன் உணவாகும். இதன் பார்வை திறன் அதிகம். இவற்றின் ஆயுட்காலம் 10 - 15 ஆண்டுகள் ஆகும். ●

**ம.லதீசன்**
இல. 75/3, அம்மன் கோவில் வீதி,
பண்டாரிகுளம், வவுனியா.



ஸ்காட்லாந்து நாட்டின் நாணயம் பவுண்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலங்குகள் குறட்டை விடுமா?

கொரில்லாக் குரங்கு, கரடி, நாய் போன்றவை குறட்டை விடும். மனிதர்களும் விலங்குகளும் குறட்டை விடக்காரணம் என்ன தெரியுமா? வாயால் சுவாசிக்கும்போது மூக்கையும் வாயையும் பிரிக்கும் மெல்லிய சவ்வு போன்ற இடத்தில் அதிர்வுகள் ஏற்படும். அதனால் தான் குறட்டை ஏற்படுகிறது. குப்புறப்படுத்து தூங்கும்போது மூக்கில் சுவாசத் தடை ஏற்படுவதனாலும் குறட்டை ஏற்படுவதுண்டு.

த.கமலரூபன்
தரம் 6B, வ/த.ம.ம.வி

## தேனீ

தேனீக்களுக்கு 5 கண்கள் உள்ளன. இவை ஒரு நாளைக்கு 5 கி.மீ தூரம் பறக்கக்கூடியவை. தேனீக்களால் 750 மீற்றருக்கு அப்பாலுள்ள பூவின் மகரந்தத்தையும் நறு மணத்தையும் உணர முடியும்.

தேனீக்களின் ஸ்பெஷல் என்ன தெரியுமா? இவை ஒரு மணி நேரத்தில் 800 பூக்களில் மாறி மாறி அமர்ந்து தேனை எடுத்து விடுமாம். அத்துடன் தேனீக்களால் புற ஊதாக்கதிர்களையும் பார்க்க முடியுமாம்.

யொ. வாணுயா
தரம் 6B, வ/த.ம.ம.வி

## என்னைத் தெரியுமா?



ஆங்கில இலக்கிய வளர்ச்சிக்கு உரம் சேர்த்தவர்களில் நானும் ஒருவன்! ஏராளமான ஆங்கில நாடகங்களையும், நாவல்களையும் நான் எழுதியிருக்கிறேன். மிகச் சிறந்த ஒரு இசை விமர்சகனாகவும் நான் இருந்திருக்கிறேன்.

அட! என்ன நானே என்னைப்பற்றி பெருமையாக சொல்கிறேன் என்று பார்கிறீர்களா? நீங்க வேற! 1925இல் எனக்கு நோபல் பரிசு கொடுத்தார்கள். வேண்டாமென்று திருப்பிக் கொடுத்துவிட்டேன்.

பெர்ணாட் ஷா என்பது எனது பெயர்.

## கவிதையே தெரியுமா?

### திருந்திவிடு மானிடா!

ஓ மனிதனே! நீ மட்டும் ஏன் இப்படி?
உன்னைப் போல் ஒருவன்
தன் பிள்ளையின் எதிர்காலம்
என்னவென்று சிந்திக்கிறான்
நீ மட்டும் ஏன் சிந்திக்க மறுக்கிறாய்?
நீ பள்ளிவாசல் மிதிக்கவில்லை என்பதற்காக
உன் பிள்ளைக்கு ஏன்
கல்விகற்க தடை விதிக்கிறாய்?
இன்றைய உன் பிள்ளை நாளை நாட்டின்
நற்பிரஜை என்பதை மறந்துவிடாதே!
இனியாவது திருந்திவிடு மானிடா!!

M.விஜயகௌரி, தரம் 10
வ/மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம்



வெனிசுலா நாட்டின் நாணயம் பொலிஹல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வார்த்தைகள்

ஒரு மனிதன் பேசும் வார்த்தைகள் அவன் எப்படிப் பட்டவன் என்பதை எடைபோட்டுக் காட்டிவிடும். இடம், காலம் அறிந்து வார்த்தைகளைப் பிரயோகிக்கும் வித்தையினை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பண்பான வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகம். அதுகேட் போர் மனதை ஈர்க்க வல்லது. வார்த்தைகள் மகா சக்தி வாய்ந்த ஆயுதம். அது எவரையும் கொல்லவும், காயப்படுத்தவும் வல்லது.

“கல்லடி வாங்கினாலும் சொல்லடி வாங்காதே” என்பார்கள். வார்த்தைகள் உன்னுள் இருக்கும்வரை நீ அதற்குத் தலைவன். அதை வெளியே கொட்டிவிட்டால் நீ அதற்கு அடிமை.

நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள்! அவை என்றும்

பூ. செல்வநீதன்,
ஞா. செந்தூரன்
தரம் 13,
வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்



## போர் விமானங்களும் தயாரித்த நாடுகளும்

| | |
|---|---|
| சுப்பர் சோனிக் | ~ ரஷ்யா |
| வை 12 | ~ சீனா |
| அன்ரனோவ் | ~ உக்ரைன் |
| மிராஜ் | ~ பிரான்ஸ் |
| கிபீர் | ~ இஸ்ரேல் |
| புகாரா | ~ அர்ஜன்டினா |
| ஜகுவார் | ~ பிரான்ஸ் |
| சியாமாசெட்டி | ~ இத்தாலி |
| சீ பிளேன் | ~ சீனா |

யோ.கஜன்
தரம் 7,
மு/உடையார் கட்டு ம.வி

## உலக அதிசயங்கள்

| | |
|---|---|
| தாஜ்மஹால் | |
| பிரமிட்டுக்கள் | ~ இந்தியா |
| மாபெரும் சுவர் | ~ எகிப்து |
| சுதந்திர சிலை | ~ சீனா |
| சாய்ந்த கோபுரம் | ~ அமெரிக்கா |
| நயகரா நீர்வீழ்ச்சி | ~ இத்தாலி |
| தொங்கு தோட்டம் | ~ வடஅமெரிக்கா |
| | ~ பாபிலோனியா |

நா.கார்த்திகா
தரம் 10B,
கிளிநொச்சி ம.க





சிலந்திகளில் 20,000 வகைகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுகளும் நாணயங்களும்

இலங்கை - ரூபாய்
சிங்கப்பூர் - டொலர்
சவுதிஅரேபியா - ரியால்
தாய்லாந்து - பாத்
ஜேர்மனி - மார்க்
சுவிஸ்சர்லாந்து - பிராங்
ரஷ்யா - ரூபிள்
லிபியா - டினார்


**தீபிகா கமலநாதன்**
தரம் 10,
கிளிநொச்சி ம.வி


## கண்டுபிடிப்புக்கள்

பலூன் ~ ஜோசப்மோன் கோல்பியர்
ஆகாய விமானம் ~ ரைட்சகோதரர்கள்
கூட்டல் இயந்திரம் ~ வில்ஹம்ஸ்கிக்கார்க்
பெற்றோல் ~ கார்ல்பென்ஸ்
சைக்கிள் ~ ஜான்பொயட் டன்லட்
தீப்பெட்டி ~ ஜான்பொஸ்கர்
மோட்டார்சைக்கிள் ~ கன்ஸ்பிட்டன் ஜீ டாய்ம்லர்



**சா.திருமகள்**
தரம் 9A,
யாழ்ப்பாணக் கல்லூரி
யாழ்ப்பாணம்.


## தெரியுமா உங்களுக்கு?

நீரின்றி அதிககாலம் வாழக்கூடிய பிராணி - எலி.
கிரிக்கெட் மட்டை வில்லோ மரத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது.
பறவைகள் கூடுகட்டாத மரம் - இலந்தை.
நெய்யில் இல்லாத விட்டமின் - விட்டமின் A.
மழைநீரில் உள்ள விட்டமின் - விட்டமின் B12.
உலக விண்வெளி தினம் - ஏப்ரல் 12.


**இ.குபேதினி**
தரம் 5E,
வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.


## தலைநகரங்கள்





காயத்திரி கோபாலசிங்கம்
தரம் 12,
மு/பாலிநகர் ம.வி




ஆசியாவின் கைத்தொழில் வேங்கைகள் எனப்படுபவை தூர கிழக்கு நாடுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞான வினா விடை

1. மனித மூளையின் எப்பகுதியில் பார்வை மையம் உள்ளது?
2. வாய்க்குழியில் சுரக்கும் நொதியம் எது?
3. பித்தம் அமிலமா காரமா?
4. இரைப்பையில் சுரக்கும் நொதியம் எது?

விடைகள்

1. பிடரி
2. அமிலேஸ்
3. காரம்
4. பெப்சின், இரெனின்

S.ஹம்சவதனி, தரம் 9A
மன்/புனித சவேரியர் பெ.தே.பாடசாலை

## சிந்தனைக்கு

- நீளமான பேச்சு குறைவான மதிப்பைப் பெறும்.
- முட்டாளுடைய கேள்விக்கு மௌனமே மேலான பதில்

கு.புனிதராஜ், தரம் 9B
வ/விபுலானந்தாக் கல்லூரி

இவ்விதழில் இடம்பெற்றுள்ள ஒருவரித் தகவல்களை தொகுத்து அனுப்பியவர்
**ஜெ.ஜெயதர்சினி**
சாவகச்சேரி யாழ்ப்பாணம்.

## கவிதையே தெரியுமா?

### கல்வி

பயி லுகண்ணே பயிலு
கல்வி அறிவை பயிலு
பாடம் நன்றாய் பயிலு
செந்தமிழ் தனிலே சிறிதும்
சேரா பிறமொழிக் கலப்பு
சுந்தர தமிழைப் பேசு
பயிலு கண்ணே பயிலு
கல்வி அறிவை பயிலு

தி.சாருகா, தரம் 9
கோ.நொச்சிக்குளம் அ.த.க.பாடசாலை.

## கவிதையே தெரியுமா?

### எங்கள் கிராமம்

எங்கள் கிராமம்
எங்கும் இன்ப ராகம்
வானில் பறக்கும் கிளிகள்
வண்ணம் காட்டும் மயில்கள்
சேற்றில் வாழும் மரங்கள்
சோற்றை வழங்கும் கரங்கள்
இயற்கை வாழும் கோவில்
இன்னல் தாவும் வாயில்
உழைப்பே அங்கு பணியாகும்
சோம்பல் மக்களின் பிணியாகும்.

சு.கோகிலவதனி, தரம் 5A
வ/பெரியகோமரசன்குளம் ம.வி



ஈக்கள் இல்லாத நாடு சீனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்ததியின் அறிவுப் போட்டி

இல. 05



ஜுன் மாத இதழில் கேட்கப்பட்ட பத்து கேள்விகளுக்குமான சரியான விடைகளோடு ஏராளமான தபாலட்டைகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் குலுக்கல் முறையில் இருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

**பரிசுபெறுவோர்**

① செல்வி. சங்கீதா சிவகுமாரன்
யாழ்/யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

② ஜெ.அனோஜன்,
தண்ணீரூற்று,
முள்ளியவளை.

**இருவருக்கும் எமது வாழ்த்துக்கள்**

ரூ. 1000 பெறுமதியான வவுச்சர்கள் இரண்டு இருவருக்கும் பரிசாக வழங்கப்படுகிறது. அவற்றைக்கொண்டு அருந்ததி சூப்பர் மார்க்கெட்டில் நீங்கள் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

**சரியான விடைகள்**

1. சுவீடன்
2. அரேபியத் தீபகற்பம்
3. ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா
4. மணிலா
5. குளோரோஃபில்
6. 659
7. கென்யா
8. தொம்மோடி
9. திக்ரீத்
10. 50

வெற்றிபெற்றோருக்கு தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும். பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்கள்.



சீனி உற்பத்தியில் அதிகம் ஈடுபடும் நாடு கியூபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விகள்

**முடிவு திகதி**
**30-08-2005**

1. இரண்டு கண்டங்களுக்கிடையே உள்ள கால்வாய் எது?
2. மாணிக்க கங்கையின் பழைய பெயர் யாது?
3. சார்க் அமைப்பில் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்கின்றன.
4. பாக்கிஸ்தான் நாட்டின் நாணயம் எது?
5. அன்னை தெரேசா பிறந்த ஆண்டு எது?
6. P-TOM என்பதன் விரிவு யாது?
7. எகிப்திய ஜனாதிபதி யார்?
8. பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
9. ஹரிபோட்டரின் கதாசிரியை யார்?
10. "ஆச்சி பயணம் போகிறார்" எனும் பிரபல நகைச்சுவை நாவலை எழுதியவர் யார்?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
**அருந்ததியின் அறிவு போட்டி-இல-05**
அருந்ததி சுப்பர் மார்க்கெட்,
361, ஹொரவபொத்தானை வீதி,
வவுனியா.


ARUNTHATHY
SUPER MARKET

உயர் தரத்தினாலான மளிகைப் பொருட்கள், இறக்குமதி செய்யப்பட்ட உணவுவகைகள், அனைத்து வகையான ஐஸ்கிறீம் வகைகள், பான்சிப் பொருட்கள், சொக்கலேட் வகைகள், பரிசுப் பொருட்கள், மற்றும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.!

அருந்ததி சுப்பர் மார்க்கெட்
இல: 361, ஹொரவப் பொத்தானை வீதி, வவுனியா.




இந்தியாவின் பூந்தோட்டம் என அழைக்கப்படுவது பெங்களூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப்பக்கம்

தயாரிப்பு : ஸ்ரீநி

உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள்

## இத்தாலி—1934

மத்தியதரைக் கடலில் சப்பாத்துக் கால் நாடு எனப் பெயர்கொண்டு ஏழு மலைகளின் நகரம் ரோமை தலைமையகமாகக் கொண்டு இத்தாலி விளங்குகிறது.

டெல்பியீரோ, ரொபோட்டோ பகீயோ, சீசயர்மால்டினி இவர்களை இத்தாலியின் உதைபந்தாட்ட ரசிகர்கள் மறக்க மாட்டார்கள்! புகழ்பூத்த வீரர்கள்! இத்தாலியின் மிலான் அணி உலக உதைபந்தாட்ட வரலாற்றில் மறக்கப்பட முடியாத சிறந்த அணி!

இத்தாலி இதுவரை மூன்று தடவைகள் (1934, 1938, 1982) உலகக் கிண்ணத்தை தனதாக்கி கொண்டுள்ளது.

முதலில் உலகக் கிண்ணத்தை சுவீகரித்த ஐரோப்பிய அணி என்ற பெருமையும் இதற்கு உண்டு. இரண்டு தடவைகள் (1970, 1994) இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இந்தளவு பெருமைகொண்ட இத்தாலி நாட்டில் இதுவரை இரண்டு தடவைகள் (1934, 1990) உலகக் கால்பந்துப் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இதில் 1934ம் ஆண்டு போட்டிகள்வரலாற்று பிரசித்திபெற்றன. உலகின் இரண்டு சர்வாதிகாரிகள் ஐரோப்பாவை கிலிகொள்ள வைத்த காலம்! முசோலினி என்ற பெயர் எவரையும் நடுங்க வைத்தது! ஹிட்லருக்கு நிகராக இவரது பெயர் உச்சரிக்கப்பட்ட காலம் அது!

1930ம் ஆண்டு உருகுவே போட்டிகளை இத்தாலி பகிஷ்கரித்திருந்தபோதும் இந்த அரிய விளையாட்டுத்துறை வெற்றி இத்தாலிக்கு கிடைத்தது என்றால் அதன் சந்தோஷம், மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!

முசோலினி தனது பொருளாதார மேலாதிக்கத்தையும் அரசியல் வல்லாதிக்கத்தையும் உலகிற்கு காட்ட ஒரு சந்தர்ப்பமாகவே இதனைக் கருதினார் என்றால் அது மிகையாகாது!



பின்புறம் பறக்கும் பறவை தேன்சிட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண காற்பந்து போட்டிகள்

1934ல் இத்தாலியில் நடைபெற்ற போட்டிகளில் 32 நாடுகள் பங்குபற்றியதால் ஆரம்ப கட்ட சுற்றுப் போட்டிகள் அவசியமானதாக இருந்தது. 16 அணிகள் இறுதிச் சுற்றுக்கு இதன்மூலம் தெரிவு செய்யப் பட்டன.

1930ம் ஆண்டு போட்டிகளை பல ஐரோப்பிய நாடுகள் புறக்கணித்தது போல் தென் அமெரிக்காவின் சிறந்த அணிகளான அர்ஜெண்டினா, பிரேசில் ஆகியன போட்டிகளை புறக்கணித்திருந்தன என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இதனால் கால்இறுதிக்கு ஐரோப்பிய நாடுகள் மட்டுமே தெரிவு செய்யப் பட்டன.

ஸ்பெயின் - இத்தாலிக்கு இடையிலான கால்இறுதியாட்டம், இத்தாலி-ஒஸ்ரியாவுக்கு இடையிலான அரையிறுதியாட்டம் இரண்டு தடவைகள் ஆடப்பட்டன. ஆட்டம் வெற்றிதோல்வியின்றி நிறைவுபெற்றால் அடுத்தநாள் மீண்டும் போட்டிகள் நடத்தப்படுவது ஆரம்பகால உதைபந்தாட்ட விதியாக இருந்தது. இறுதியில் இத்தாலி இறுதிப்போட்டிக்கு தெரிவானது.

1934 ஜுன் 10! ஞாயிற்றுக்கிழமை சுமார் 50,000 ரசிகர்கள் சூழ ஃபுளோரன்சின் டெலபார்ரிரி விளையாட்டரங்கில் விழாக்கோலம் பூண்டது! இத்தாலியர்களின் இதயங்கள் இறுக்கத்தில் சுவாசிக்கத் தயங்கின! இவ்வாறு இதயத்தைப் பிடித்தவண்ணம் இத்தாலியர்கள் மட்டுமா போட்டியை கண்டுகளித்துக்கொண்டிருந்தனர்?

தனது பிரத்யேகமான அறையில் அமர்ந்திருந்து போட்டியை ரசித்துக்கொண்டிருந்த முசோலினி கூட உரோம சாம்ராஜ்யம் சரிந்து வீழ்ந்தது போல் இத்தாலி தோற்றுவிடக்கூடாது என்பதில் கனமான இதயத்துடன் காத்திருந்தார்.

இறுதியில் இறுகிய இதயங்கள் மகிழ்ந்தனவா? 25 நிமிடங்கள் மட்டுமே போட்டி முடிவடைய இருக்கும்வேளை செக்கோஸ்லோவாக்கியா ஒரு கோல் போட்டது! இதனால் 1-0 என்ற நிலை. ஒருசில நிமிடங்களில் போட்டி முடிவடையும் வேளை நெருங்கி வர.... இத்தாலி ஒரு கோலைப்போட போட்டி 1-1 என்று சரிசமமாகியது!

மேலதிக நேரம் கொடுக்கப்பட்டது. இத்தாலி மேலும் ஒரு கோலைப்போட்டது! முசோலியின் சர்வாதிகாரம் ஜெயித்தது! இந்த வெற்றி நீடித்ததா?

1938ம் ஆண்டுக்குச் செல்வோம்......




முதன் முதலில் விண்வெளி சென்ற பெண்மணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டாள் அரக்கன்

கதை, : ப.வைஸ்ணவன் ஓவியம் : எஸ்.கௌரீஷன்






உலகிலேயே அதிக முட்டையிடும் உயிரினம் கறையான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இரவுப் பொழுது அதிகமான நாள் டிசம்பர் 22.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பகற்பொழுது அதிகமான நாள் ஜூன் 21.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# www.ஆச்சரியம்.com!



இணையன்



கதிரை மேலே
கதிரை வைத்து
சுத்துகிற பூமி இது.
கதிரை கொஞ்சம்
ஆட்டம் கண்டால்
கத்துகிற காலமிது.



நிறத்தால் வேறுபட்டாலும்,
குணத்தால் ஒன்றுதான்.




இப்பபெல்லாம் மனிசாள்கிட்ட
வாசிப்புப் பழக்கம்
அருகிகிட்டேயிருக்கு
அதான.....



கங்காரு நான்கு கால்களில் நிற்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிகாலத்தில் வாழ்ந்த மிருகங்கள்...

ஆதிகாலத்தில் வாழ்ந்த மிருகங்கள் பற்றிக் கேட்டால் அனைவரும் கூறும் பதில் டைனோசர். இந்த டைனோசரைப் போல எத்தனையோ மிருகங்கள் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இப் பூமியில் வாழ்ந்திருக்கின்றன. அவற்றைப் பற்றி ஆராய்கிறது இச் சித்திரக் கட்டுரை.

முதன் முதலில் விலங்குகள் கடலிலேயே தோன்றியிருக்கின்றன. எப்போது தெரியுமா? 3500 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு. ஆனால் அப்போது வாழ்ந்த மிருகங்கள் பற்றிய சரியான விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

அக்காலத்தில் வாழ்ந்த அனைத்து மிருகங்களினதும் தோல்களும், ஏனைய உறுப்புக்களும் மிக மெல்லியவையாக இருந்தமையால் அவை தடயங்கள் இல்லாமல் அழிந்து போயின.

கிட்டத்தட்ட 600 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் மிருகங்களது தோல்கள், ஓடுகள் போன்றவை தடிப்பாகத் தொடங்கின.


உலகில் முதன் முதலாக முதுகெலும்போடு தோன்றிய விலங்கு எது தெரியுமா? மீன். ஆம் 500 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கடலிலே மீன் இனங்கள் தோன்றியிருக்கின்றன.

கடலிலே தோன்றிய விலங்குகள் மெல்ல மெல்ல தரைக்கு வரத்தொடங்கின. ஈரூடக வாழிகளான தவளை, தேரை போன்றவையே தரையில் முதலில் கால் பதித்த விலங்குகள் ஆகும்.




ராங்கூன் என்ற பிராணி இரையை நீரில் கழுவிய பின்புதானாம் சாப்பிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மம்முத் (Mammoth)
எனப்படும் மிகப் பெரும்
யானைகள் (தற்போதுள்ள
யானைகளை விட
பல மடங்கு பெரியவை)
5 மில்லியன் ஆண்டுகளுக்கு
முன்பு பூமியில் வாழ்ந்திரு-
க்கின்றன. அடர்ந்த ரோமமும்,
நீண்டு வளைந்த தந்தமும்
உடைய இவற்றைப் பார்க்கவே
பயமாக இருக்குமாம்.

ஹைறகதேரியம்
(Hyracotherium)
எனப்படும் இவ்விலங்குதான்
உலகின் முதன் முதலில்
தோன்றிய குதிரை எனப்படுகிறது
இவ்வகை விலங்குகளே
காலப்போக்கில் குதிரைகளாக
மாறின.





கீரியினது உருவமும்
நீண்ட வாலுமுடைய இவ்விலங்கு
பராமிஸ் (Paramys)
என அழைக்கப்படுகிறது.
24 மில்லியன் வருடங்களுக்கு
முன்பு வாழ்ந்த இவைதான்
தற்போதைய எலிகளின்
மூதாதையர்கள்.




கிரந்தி என்ற வடமொழிச் சொல்லின் தமிழ்ப்பதம் கரப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகின் முதலாவது பறவை இதுதான். 208 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இவை வாழ்ந்திருக்கின்றன. ஆர்க்கியோப் டெரிக்ஸ் (Archaeopteryx) என்பது இதன் பெயராகும்.



பாய்மரம் போன்ற அமைப்பை தனது முதுகுப் பகுதியில் கொண்டுள்ள இவ்விலங்கு பார்ப்பதற்கு டைனோசர் போல காட்சியளிக்கும். 286 மில்லியன் ஆண்டுகளுக்கு வாழ்ந்த இவ்விலங்குகளை டைனோசர்களின் மூதாதையர்கள் எனலாம்.



புலியைப் போன்ற தோற்றத்தையுடைய இவ்விலங்கு சிமிலடன் (Similodon) என அழைக்கப்படுகிறது.
2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இவற்றிற்கு மிக நீண்டதும் தடிப்பானதுமான உரோமங்கள் கழுத்துப் பகுதியில் உள்ளன.

ஆதாரம் The King Fisher Children's Encyclopedia



பிரான்சில் கொசுக்கள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவப் பக்கம்

## காயங்களில் கிருமி தொற்றுதல்



கடந்த ஜுலை மாத இதழில் சிராய்ப்புக் காயங்கள் பற்றிப் பார்த்தோம் இல்லையா? இந்த இதழில் காயங்களில் கிருமி தொற்றுவதைப் பற்றி பார்ப்போம்.

யாரோ புண்ணை நனைக்கக் கூடாதுன்னு சொன்னாங்களேன்னு 10 நாள் குளிக்காமல் இருந்து, பக்கத்தில் உள்ளவர் மயங்கி விழுகிற விபத்தை தவிர்க்கும் முகமாக எந்த நாளும் காயத்தை (கட்டை) அவிழ்த்து சுத்தமாக கழுவி நன்றாக உலர்த்தி அல்லது பஞ்சினால் ஒற்றி நீரை உறிஞ்சியபின் மீண்டும் மருந்திட்டுக் கட்டவும்.

(கழுவும்போது உப்பு நீரில், அல்லது சுடுநீரில் உப்பு சேர்த்து கழுவலாம்.) மக்னீசியம் சல்பேற்று கரைசலை உபயோகிப்பது இன்னும் நல்லது. ஏனென்றால் மக்னீசியம் சல்பேறகரைசல் இறந்துபோனத் திசுக்களை அகற்றி கிருமி பரவலை தடுக்கும்.



புண்களின் பிரதான எதிரி இலையான்கள்தான். எனவே



இவைகளை புண்களின் அயல் பிரதேசத்தில் கூட அனுமதிக்கக்கூடாது. மேலும் ஓய்வாக இருப்பதாலும் காயம் பட்ட இடத்தை உயர்த்தி வைத்திருப்பதாலும் விரைவில் சுகம் பெறும் வாய்ப்பு இருக்கிறது.

இப்படியெல்லாம் அவதானமாக இருந்தும் சீழ் பிடித்தாலோ அல்லது கிருமி தொற்றினாலோ "லாகெஷின் தாய்த் திரவத்தை (ஹோமியோபதி மருந்து) நீரில் கலந்து சுத்தம் செய்யலாம். அதோடு லாகெஷின் குளுசைகளைப் பெற்று ஒருதடவைக்கு ஒன்றுவீதம், ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை உட்கொள்ளலாம்.

இதையெல்லாம் சரியாகக் கடைப்பிடித்தால் ஆயுள் கொஞ்சம் அதிகரிக்கும். அவ்வளவுதான்.

சரி வாசகர்களே அடுத்த இதழில் வெட்டுக் காயங்களும், அவற்றின் பாதிப்புகளும் பற்றிப் பார்ப்போம்.

**முதலுதவியோன்**
**மீண்டும் உதவுவான்**

தொகுப்பு : ராஜேஸ்



சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் அக்டோபர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தயாவின் வாக்கியப் போட்டி 4

போட்டி இலக்கம் - 02இல் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றிகளும், பாராட்டுக்களும். பரிசுக்குரியவர்களாக 10பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறந்த வாக்கியம் எழுதியவர் -

**பா.தனுஷன்,** இல.18, கித்துள் வீதி, குடியிருப்பு, வவுனியா.

**"முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கலாம்**
**சோற்றையும், பூசணிக்குள் மறைக்கலாம்**
**பச்சிளம் பாலகனை பூசணியில் கிடத்தி**
**எதை மறைக்கத் திட்டம்?"**

முடிவுத் திகதி 30-08-2005

**மேலும் பரிசுபெறுவோர்**

02. பாரதி : பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு.
03. யோ.சுகுணா : தரம் 10, வ/நெடுங்கேணி ம.வி.
04. ம.எமரென்சியா : இல. 204, குருமண்காடு, வவுனியா.
05. சி.கோகிலவேணி : தரம் 9, மு/உடையார்கட்டு, ம.வி.
06. சா.மெற்றில்டா : மருதனார் மடம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.
07. சி.அருண் : தரம் 10, வ/நெடுங்கேணி ம.வி.
08. லோ.விதுஷா : வ/கனகராயன்குளம் ம.வி
09. ஜெ.தேனுஜன் : தூடரிக்குளம் வீதி, செட்டிகுளம், வவுனியா.
10. பகீரதி முத்துச்செட்டி : தரம் 10, வ/கனகராயன்குளம், ம.வி.



அருகிலுள்ள படத்திற்குப் பொருத்தமான வாக்கியத்தை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி

**தயாவின் வாக்கியப்போட்டி இல-04,**
**பூங்கனி,**
**இல. 141, திருநாவற்குளம், வவுனியா.**

வெற்றிபெற்றோருக்கு பரிசுகள் பெறுவது தொடர்பாக தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பப்படும்.


**தயா ஸ்ரோர்ஸ்**

**அனைத்து வகையான**

பயிற்சிப் புத்தகங்கள், கதைப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் ஆடம்பரப் பொருட்கள், மாதாந்த, வாராந்த சஞ்சிகைகள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

T.P: 024 - 2222386
077 - 3025436

**இல 06, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.**




ஆப்கானிஸ்தானில் ரயில்கள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னைத்தெரியுமா?



எனது படத்தைப் பார்த்து யாரோ புலவர் என்று எண்ணிவிடாதீர்கள். நானொரு விஞ்ஞானி. அலெக்ஸ்சாண்டர் கிரஹம்பெல் என்பது எனது பெயர். இப்போது தெரிந்திருக்குமே! தொலைபேசியைக் கண்டுபிடித்தது நான்தான். 1847ல் ஸ்காட்லாந்தில் பிறந்த நான் 1874ல் தொலைபேசியைக் கண்டுபிடித்தேன். தோமஸ் வாட்சன் என்பவர் எனது உதவியாளராக இருந்தார்.

எனக்கு ஒரு சின்ன ஆசை. என்ன தெரியுமா? ஒவ்வொரு தொலைத்தொடர்பு நிலையங்களிலும் எனது படத்தை மாட்டிவையுங்களேன். எனக்கும் சந்தோஷமாக இருக்கும்.






கனி 1 கனி 2 கனி 3 கனி 4

பூங்கனியின் புதிய வாசகர்களே! எமது முன்னைய இதழ்கள் உங்கள் கரங்களில் கிட்டவில்லையா? கவலையை விடுங்கள். உங்கள் பெயர், முகவரியைத் தெளிவாக எழுதி, முப்பது ரூபா பெறுமதியான (ஒரு இதழுக்கு) முத்திரையையும் இணைத்து, எந்த இதழ் வேண்டுமென்ற விபரத்தையும் எழுதி அனுப்புங்கள்! பூங்கனி உங்கள் இல்லம் தேடிவரும்!



திரவத் தங்கம் எனப்படுவது பெற்றோல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற் பருமனைக் குறைப்பது எப்படி?

## டொக்டர் ஸ்பீக்கிங்



தற்போதைய இயந்திர வாழ்க்கையாலும், உடல் உழைப்பின்மையாலும், கட்டுப்பாடற்ற உணவு முறைகளாலும், உடற்பருமன் அதிகரித்து வருகிறது. இதனை தவிர்ப்பதெப்படி?.

உடற் பருமன் கூடியவர்கள் கொழுப்பு, மாச்சத்து உணவுகளை தவிர்ப்பது நல்லது. நன்கு வியர்வை சிந்தி வேலைசெய்ய வேண்டும். இனிப்பு வகைகள், குளிர்பானங்கள் கூடாது. நார்ச்சத்து உணவுகள், கீரை வகைகள் நல்லது.

ஒரு கரண்டித் தேனும், ½ டம்ளர் கொதித்தாறிய நீரும், இரண்டு கரண்டி தேசிப் புளியும் கலந்து தினமும் காலையில் குடித்து வர உடற் பருமன் குறையும்.

அத்தோடு கீரை வகை நீத்துக்காய், சுரைக்காய், கெக்கரி, முள்ளங்கி போன்ற உணவுகளை உட்கொண்டால் உடற் பருமன் குறையும். ●

வைத்தியர்
ப.சத்தியநாதன்



## ஆக்கங்களை அனுப்பும்போது....

- தாளின் ஒருபக்கத்தில் மட்டுமே எழுதுங்கள்.
- தெளிவான கையெழுத்தில் உங்கள் ஆக்கங்கள் அமையட்டும்.
- ஓவியங்கள் அனுப்புவதாயின் கறுப்புநிறப் பேனாவால் அல்லது பென்சிலால் வரைந்து அனுப்புங்கள் வர்ண ஓவியங்கள் இப்போதைக்கு வேண்டாமே பிளீஸ்!
- உங்கள் பெயர், முகவரி போன்றவற்றை தெளிவாக கடித உறையிலும் ஆக்கம் எழுதும் தாளிலும் எழுத வேண்டும்.
- பொது அறிவுத் தகவல்கள், மருத்துவக் குறிப்புகள் போன்றவற்றை அனுப்பும்போது அவற்றை எங்கிருந்து பிரதி செய்தீர்கள் என்பதை தவறாமல் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

முகவரி

**பூங்கனி**

இல. 141, திருநாவற்குளம்,
வவுனியா.



ஏழைகளின் அப்பிள் என அழைக்கப்படுவது வாழைப்பழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**வித்தியாசமான புகைப்படங்களை எடுப்பதில் ஆர்வமுள்ளவரா நீங்கள்?**

உங்கள் புகைப்படங்களைப் பிரசுரிப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம். நீங்கள் எடுத்த புகைப்படத்தின் 2 பிரதிகளையும், உங்கள் பெயர்முகவரி போன்றவற்றையும் தெளிவாக எழுதி அனுப்பிவையுங்கள்.


**கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் மூலம் நீங்கள் உருவாக்கும் வித்தியாசமான படங்களையும் அனுப்பலாம்.**



**முகவரி :**
போட்டோ கலாட்டா
பூங்கனி
141, திருநாவற்குளம், வவுனியா.

Computer Designing

Multi Colour Offset Printing




61-B,
1st Cross Street,
Vavuniya.
024 2223658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்மதி
# புத்தகசாலை



பாடசாலை மற்றும் அலுவலக உபகரணங்கள், பேன்சி வகைகள்,
பரிசுப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்
போன்ற அனைத்தையும் பெற்றுக்கொள்ள

## வான்மதி புத்தகசாலை

**157/2/3, பூந்தோட்டம் சந்தி, குடியிருப்பு வவுனியா.**
**தொ.பே : 077 6169722.**

The Poonkani, A monthly magazine for children was printed at Vaani Computer Printing Centre, 61B, 1st Cross Street, Vavuniya on behave of Kaatru Publication, on 1st August 2005.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org